உ

கடவுள்துணை.

அகஸ்தியமாமுனிவர்

அருளிச்செய்த

பூரணசூத்திரம்-௨௱௰௬.

இஃது,

காஞ்சிபுரம்

பரப்பிரமசொரூபியாகிய

சுந்தரானந்தசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

செய்யூர்

பரமானந்தசுவாமிகளால்

பரிசோதித்து,

புதுப்பாளையம்

ஸ்ரீநிவாசமுதலியார்

பாசிப்பட்டணம்

நயினாமுகம்மதுப்புலவர்

இவர்கள் முயற்சியால்

லோஜிசியன்பிரெஸென்னும்

நியாயவிலக்கண அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௫ ௵ ஜனவரி ௴.

இந்த அகஸ்தியமாமுனிவரருளிச்செய்த பூரணசூத்திரம் (௨௱௰௬-ம்) பதிப்பித்த புதுப்பாளையம் ஸ்ரீநிவாச முதலியார் பாசிப்பட்டணம் நயினுமுகம்மதுப் புலவரிவர்களுடைய அனுமதியில்லாமல் அச்சிற் பதிக்கின்றவர்களும் அதைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தலைவர்களும் ௲௮௱௪௰௭ ஜனவரிமீ (௨௫-ல்) பதிப்பிக்கப்பட்ட கனம்பொருந்திய கவரன்மெண்டு கஜட் என்னும் பத்திரிகையில் ௲௮௱௪௰௭த்து (௨௰-வது) ஆக்ட்டில் கூறியபடி ஷெயாரால் வழக்கிடப்படும் நஷ்டத்துக்குத்தரவாதிகளாகக் கடவரென்றியாவருமறிவீர்களாக.

உ

கடவுள்துணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

பூரணசூத்திரம் - உ௱௰௬.

காப்பு.

ஓடியதோர் தந்திமுகன் றனைப்பணிந்து
உரைத்திடுவேன் பூரணசூத் திரத்தையாலுந்
தேடியதோர் மந்திரத்தா லஷ்டசித்தித்
திறமாக வுரைக்கின்றேன் யோகியோர்க்குக்
கூடியதோர் கந்தமதைச் சிதம்பரத்தில்
குணமான காலதனைக் கூட்டிமூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத்துள்ளே
அமைத்திட்ட மூலகணபதியேகாப்பு.

ஒன்றான பூரணமு மாறுதார
முரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூற்றாறும்
பண்டான தீட்சைபதி னைன்றும்மொட்டி
பத்துடனே முப்பத்தி ரண்டுதீட்சை
உண்டான சமாதிகற்பம் வாசிநேர்மை
புரைப்பான சிவயோகம் பிராணயந்தார்

நஸ்முன வாதத்தின் தீட்சையோடு
நலமான சவுக்காரத் திறவுகோலே. (க)

திறவுகோல் முன்னுரைத்த நூல்கட்கெல்லாஞ்
செய்பாகங் கைபாகந் தீட்சைப்பாகம்
அறைகிறேன் சரிதையொடு கிரிகைமார்க்கம்
அப்பனே முனிசித்தர் நூல்கட்கெல்லா
மறைபுகழாய்ச் சொன்னதெல்லாம் வெளியாய்ப்பாடி
மாட்டினேன் பூரணசூத்திரத்திற்காணும்
இறையளவுந் தப்பில்லை மறைப்போ வில்லை
யிருநூற்றுப் பத்தாறு இந்நூல்காணே. (உ)

நூல்.

காணப்பா விந்நூல்போ லொருநூலில்லைக்
காசினியி லிந்நூலைக் கண்ணிற் காட்டார்
பூணப்பா வைம்பதுக்குள் பூநீர்வித்தை
பூட்டினேன் வயித்தியத்திற் புகழோமெத்த
நாணப்பா வொருநூற்றுவைம்பதுக்குள்
நலமான சூட்சத்தை நாட்டினேன்பார்
பேணப்பா முந்நூற்றில் கர்மதர்மம்
பேசினேன் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே. (ங)

உள்ளான பூசைவிதி யிருநூறுக்கும்
உத்தமனே முந்நூற்றில் செந்தூரங்கள்

விள்ளவே ஆயிரத்தி யிருநூற்றுள்ளே
விளக்கினேன் கருவெல்லாம் வெளியாய்ப்போச்சு
எள்ளளவுந் தப்பில்லை மறைப்போவில்லை
யெப்போதுமென்ற கருவெல்லா மிதிலேயெய்துங்
கள்ளடா கள்ளருக்கு விந்தநூலைக்
காட்டாதே பன்னிரண்டுங் காத்தாலீயே. (௪)

ஆறுதாரம்.

ஈவதுதா னாருக்கு சிவயோகிக்கு
இகத்திலுள்ள மாண்பருக்கு ஈய்ந்தாயானும்
நோய்மிகுந்து சாவாரோ சொன்னேன்மைந்தா
நுண்மையாய் மனதில்வைத்து நுணுக்கங்கண்டு
காயபதத்தைப் பூசித்துக் கற்பங்கொண்டு
சமாதிக்கு ளிருந்துணர்த்துத் தலைவனாகி
நீமலைமே லேறிவிடு லோகத்துள்ளே
நின்றாக்காற் கொல்லுமடா நிசஞ்சொன்னேனே. (௫)

மூலாதாரம்.

நிசமான பூரணத்தைச் சொல்லக்கேளு
நின்மலத்தா யென்றனுக்கு வுபதேசித்தாள்
வசமான அடிமூலங் கணேசர்கோவில்
வட்டமா மைங்கோணந் திரிகோணத்தில்
ஈசமான கணேசரொடு வல்லபையுங்கூடி
யிருக்குமடா ஓம் ஈம் கிலீயுமென்று

வசமான் அங் சிவா கணபதி தேவாவென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந்தானே. (௬)

வணங்குவதுக் கிப்படிநீ சக்கரத்தை
வரிசையாய்க் கீறியே யட்சரங்கள்
பிணங்காமல் ஈங்காரம் நடுவேயிட்டு
பேரான கோணமைந்தி லைந்துமிட்டு
இணங்கவே தூப நைவேத்யத்தோடு
இலட்சமுரு வேற்றிடக் குண்டலிதானென்றுங்
கணமான கணபதிதான் பிரகாசிக்குங்
கயிலாயப் பரகதியைக் காட்டுந்தானே. (௭)

சுவாதிட்டானம்.

காட்டுவது நாற்கோண மதன்மேலப்பா
கருதுவது விருகோண முக்கோணவட்டம்
பூட்டுவது பிரமனொடு சரஸ்வதியுங்கேளு
புகலுவேன் நங் மங் ஸ்ரீம் ஐம் அங் பிரமதேவாவென்று
கூட்டுவது லட்சமுரு வேற்றுதற்குக்
குறிசொல்வேன் நாற்கோணம் நாலெழுத்துமிட்டு
நீட்டுவது விந்துவிலே அங்கென்றிட்டு
நிலையாகப் பூசிக்க முத்தியாமே. (௮)

மணிபூரகம்.

முத்தியாம் பிறைநடுவே முக்கோணமிட்டு
மூர்க்கமா மகாரமொடு உகாரமிட்டு

பத்தியாம் ஓங்காரம் ஸ்ரீங்காரங்கூட்டிப்
பச்சைவர்ன மூர்த்தியென்றே பகர்ந்துசேவி
சத்தியா மட்சரங்கள் நடுவேயிட்டு
சாற்றுவாய் லட்சமுருத் தானேயாகில்
வெற்றியாங் குண்டலியும் மேலேயேறும்
வேதாந்த பூரணத்தில் சேர்க்குந்தானே. (௯)

அனாகதம்.

சேர்க்கின்ற முக்கோண முருத்திரமூர்த்தி
திசமான அறுகோண முன்னேயிட்டு
ஆர்க்கின்ற விந்துவதி னடுவேயிட்டு
அளவான சிகாரமொடு மகாரமிட்டு
பார்க்கின்ற ஸ்ரீங்கார ஓங்காரந்தான்
பகர்கின்ற வகாரமொடு கிலீயுங்கூட்டி
தீர்க்கின்ற ருத்திரத் தேவாவென்று
செபிக்கவே வாசியது யேறும்பாரே. (௰)

விசுத்தி.

பாரடா லட்சமுரு வேறிற்றுனல்
பகருமறு கோணமதில் விந்துவிட்டுச்
சேரடா வகாரமொடு ஓங்காரந்தான்
சிறப்பான ஸ்ரீங்காரஞ் சிவாயநமாவென்று
தீரடா மயேசுவர தேவாவென்று
செபித்திடவா யிலட்சமுரு திறமாய்த்தானே

ஆரடா வுனக்கிடு வாசிசித்தி
யாறெழுத்து மறுகோணத் தறைந்திட்டேனே. (௰க)

ஆக்கினை.

அறைந்திட்ட மூன்றெழுத்து நடுவேபோடு
அருளான சதாசிவத்தி னருளைப்பாரு
விறைந்திட்ட விந்துவிட்டு நடுவேகேளு
விதமான வைங்கோண முக்கோணந்தான்
உறைந்திட்ட சோடசந்தா னைந்துங்கூட்டி
யுறவான அங்கிஷ ஐம் ஓம் என்று
பறைந்திட்ட சதாசிவதே வாயாவென்று
பகருவே னிலட்சமுரு பரிந்துநோக்கே. (௰உ)

நோக்கடா வைங்கோண மைந்துமிட்டு
நுணுக்கமடா விந்துவுக்குள் முக்கோணத்தில்
ஆக்கடா அம் அங்கிஷ ஐம் ஓமென்று
அப்பனே ஸ்ரீங்கார மிட்டுச்சேவி
மூக்கடா பாயாது வாசிதானு
முக்யமடா மேல்மூலத் துணிப்பாரு
நாக்கடா அமுர்தமது கீழேபாயும்
நலமான கீழாறு நவின்றிட்டேனே. (௰௩)

மேலாதாரம்.

அக்கினிமண்டலம்.

ஆனென்ற வாதார மேலேயாறு
மியம்புகிறே னன்முக வியல்பாய்த்தானே

தேனென்ற சதாசிவத்தின் மேலேகேளு
 தீயான மண்டலந்தான் திரிகோணமாகி
கானென்ற மண்டலத்தில் திரிகோணத்துள்
 வைத்திடுவா யகாரமொடு சவ்வுந்தானே
கானென்ற மலமறுக்கு மக்கினிமண்டலத்திற்
 கண்டிப்பு வற்றுவிடுங் கனலிற்றானே. (௰௪)

கனலிலே வாயுவந்து புக்கிற்றானாற்
 கண்திறந்து வமுர்தமது கனிந்துபாயும்
புனலான வமுர்தமுண்டால் காயமீறும்
 போச்சுதடா நரைதிரையும் புதுமையாச்சு
அனலிலே வெந்ததொரு பாண்டந்தானு
 மசையுமோ நீருக்கு வதுபோலப்பா
நினைவிலே யித்தியான மூட்டுமூட்டு
 நிச்சயமாய் சமாதிக்குள் நிலைக்குந்தானே. (௰௫)

சூரியமண்டலம்.

நிலையான வழற்குளமண் டலத்துக்கப்பால்
 நேரான சூரியமண் டலத்தைக்கேளு
சிலையான விந்துவடா உகாரமிட்டு
 செபித்திடுவாய் சூரியனோ கோடிகாந்தி
மலையாமல் வாயுவதிற் சேர்ந்ததானால்
 மைந்தனே யுன்னுடலிற் பிரகாசத்தைக்
கலையான சூரியனைப் போலாந்தேகங்
 கல்மிஷங்க ளில்லையில்லைக் காணுங்காணே (௰௬)

சந்திரமண்டலம்.

காணுகின்ற சூரியமண் டலத்துக்கப்பால்
கலைமதியாஞ் சந்திரமண் டலத்தைக்கேளு
தோணுகின்ற சோதியடா மௌனவீடு
சொல்லரிது சொல்லுகிறேன் அங்கென்றாணு
பேணியே செபித்திடவே சோதிகோடி
பிரகாச மாயிடுங்காண் பெருமைபேசார்
ஆணுவங்க ளற்றதடா அரூபாரூபம்
அக்ஷரங்க ளற்றவிட மறையக்கேளே (௰௫)

கேளப்பா ஓங்கார மதன்மேல்நிற்குங்
கெடியான வைந்துமூன் றெழுத்துமீதில்
நாளப்பா பஞ்சகர்த்தா ளைவரீதில்
நலமான ஆன்மா ஜீவகளையுமீதில்
வேளப்பா ஓமென்று தியானஞ்செய்ய
வித்தான பிறவியெல்லா மற்றுப்போச்சு
சூளப்பா பிறவியுமிவ் வளவேயாச்சு
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லப்போமோ (௰௬)

ஏகாட்சரம்.

போமென்ற பூரணமு மிதுவேயாச்சுப்
பூரணமாஞ் சூட்சத்தைப் புகலக்கேளு
தாமென்ற அகாரத்தில் உகாரமிட்டு
தனித்துநின் றோங்காரஞ் சுற்றிக்கட்டி

Page numbering incorrect

வாமென்ற வதின்கீழே மகாரமிட்டு
மகாரத்தின் மேலேறி அகாரத்துள்ளே
ஊமென்ற றீங்காரம் நடுவேயிட்டு
யுயரவே சூலமிட்டு சிங்கிவங்கே (௰௬)

வங்கென்று இருபுறமும் வைத்தாயானால்
மைந்தனே சூக்ஷமது ஏகசூக்ஷம்
பங்கென்ற பூரணமு மிதுவேயாச்சு
பகருகின்ற மந்திரமு மிதுவேயாச்சு
தங்குமே சடாக்ஷரமு மிதுவேயாச்சு
தருவான எட்டெழுத்து மிதுவேயாச்சு
அங்குபஞ் சாக்ஷரமு மிதுவேயாச்சு
ஆதியென்ற மூன்றெழுத்து மிதற்குள்ளாச்சே. (௨௰)

ஆச்சடா தசதீக்ஷை யிதனுக்குள்ளே
அண்டசரா சரங்களெல்லா மிதனுக்குள்ளே
பேச்சடா வொன்றுமில்லை யிதனையல்லோ
பெரியோர்க ளுரையாமல் மறைத்தாரையா
வாச்சடா ஐம்பூத மிதனுக்குள்ளே
மதியிரவி யானதுவு மிதனுக்குள்ளே
காச்சடா அண்டமொடு புவனமெல்லாங்
கலந்துநின்ற வத்துவிதங் கண்டுகொள்ளே. (௨௧)

கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைக் கற்பமெட்டில்
காணப்பா பதிற்றுடனே காமமாடுங்

கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கர்மமாந் தீவினைகள் காணுதோடுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கட்டாக வைத்துடனே வாசியேறுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைப் பெரியோரெல்லாங்
கட்டினார் நூல்தோறுங் காணுதென்றே (உ௨)

காணுது ஆணுமல்லப் பெண்ணுமல்ல
கருதிப்பா ரலியுமல்ல கருதிச்சொல்லத்
தோணுது வுருவொன்று மரூபாரூபந்
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லிவிட்டேன்
கோணுமல் நின்றவரோ குருவைக்காண்பார்
குருக்காணு ரானைகண்ட குருடராகு
மாணுன ஆதார தீட்சையாறு
மப்புறத்தில் நின்றதொரு ஆறுஞ்சொன்னேன். (உ௩)

ஆறுாறு பன்னிரண்டு தலமுஞ்சொல்லி
யதில்நிற்கு மட்சரஞ் சக்கரமுஞ்சொல்லி
ஏறுாத வாசியது ஏற்றஞ்சொல்லி
யேகாட்சர பூரணமு மெடுத்துக்காட்டி
கூறுாத கருவையெல்லாங் கூறினேனியான்
கூற்றனின்ற விடமிதுதான் குறித்துப்பாரு
தேறுாத பேருக்குந் தேறுந்தேறுஞ்
சிவசிவா பூரணத்தின் திறந்தான்காணே. (உ௪)

சிவதீட்சைபதினொன்றின் விபரம்.

க-உ-தீட்சை.

திறமான தீட்சையது வழியதாகச்
செப்புகிறேன் சிவதீட்சை பதினொன்றுந்தான்
கறவாதே கறந்ததொரு பால்போலப்பா
காசினியோர்பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
மறவாதே நீகேளு அம் உம் சிம் வம் யம் ஓமென்று
வளர்த்துவாய் முதற்றீட்சை மருவிக்காணும்
நிறைவாக அவ்வும் மவ்வும் ஓம் நமசிவாயாவென்று
நிகழ்த்துவா யிரண்டான தீட்சைநேரே. (உ௫)

௩-௪-தீட்சை.

நேரான மூன்றாகுந் தீட்சைகேளு
நிச்சயமாய் உம் அம் சிவ சிவாயமென்று
வேரான ஓமென்று செபித்தாயானால்
வெற்றியடா மூன்றான தீட்சையாச்சு
பாராநீ நாலான தீட்சைகேளு
பகருவேன் சிவாயநம ஓம் ஐயென்று
சீராகச் செபித்திடுவா யைந்தாந்தீட்சை
செப்புகிறே னன்றாகத் தெளிந்துகொள்ளே. (உ௬)

௫-௬-௭-தீட்சை.

தெளிவாக வைந்தான தீட்சைகேளு
சிவசிவா அவ்வும் உவ்வும் சவ்வும் ஓம் என்று

நசினமா யாமுன தீட்சைகேளு
நவிலுகிறேன் மவ்வும் உவ்வும் நமசிவாயா
குளிர்வாக ஓம் என்று செபித்தாயானல்
கூறுவேன் ஏழான தீட்சைமார்க்கம்
எளிதாக கிலீம் நமசிவாய அவ்வும் ஓமென்றே
யேற்றுவா யெட்டான தீட்சையெண்ணே. (உஎ)

அ-கூ-தீட்சை.

எண்ணவே ஓம் ஐயும் சிவ அங்கிஷாயா
யென்றுதான் செபித்திடுவா யெட்டாந்தீட்சை
பண்ணவே யொன்பதாந் தீட்சைகேளு
பரிவான சிவாய நம அம் உம் ஓமென்று
உண்ணியே யோதிடவே பத்தாந்தீட்சை
யுரைத்திடுவாய் பதினொன்றாந் தீட்சையோத
நண்ணவே மௌனம் ஏகதீட்சை
நாட்டினேன் பூரணத்தை நயந்துபாரே. (உஅ)

ஆதாரம் பனிரண்டின் தீட்சை விபரம்.

பாரப்பா தீட்சையது பதினொன்றுந்தான்
பரிவான ஆதாரம் பனிரண்டுக்கும்
நேரப்பா வொவ்வொன்றுக் கொன்றேதீட்சை
நிறுத்தியே யாதாரம் நிலைத்துப்பாரு
சீரப்பா பன்னிரண்டுக் கொன்றேதீட்சை
செப்பினேன் பூரணத்திற் செப்பினேன்யான்

ஆரப்பா தீட்சையொன்றுக் காதாரமொன்று
அண்டொன்று தீட்சையொன் றழுத்திப்பாரே. (உகூ)

சத்தி தீட்சை பதினொன்றின் விபரம்.

க - உ - ௩ - வாலை தீட்சை.

அழுத்தமாய் சத்தியுட தீட்சைபதினொன்று
மறைகிறேன் உம் அம் மம் ஈம் ஓமென்று
வழுத்தவே வாலையுட தீட்சையாச்சு
வரிசையா யிரண்டான தீட்சைகேளு
பழுத்ததொரு யம் ரம் அம் உம் மம் ஓமென்று
பலிவாக வோதிடவே பலிக்குஞ்சித்தி
வழுத்தாகு மூன்றான தீட்சைகேளு
ஈம் ஓம் அம் உம் மம் என்றிதனையோதே. (௩௰)

ச-ரு-சா-எ-தீட்சை.

ஓதவே நாலான தீட்சைகேளு
உம் மம் அம் ஈம் ஐம் ஓம் என்றோது
நீதமா யைந்தான தீட்சைகேளு
கிலீம் ஓம் மம் அம் ஐயென்று கிருபையாக
வேதமாம் ஆறான தீட்சைகேளு
விளங்கவே ஓம் வம் ஈம் விதமாய்த்தானே
நீதமா மேழான தீட்சைகேளு
நிலைத்ததொரு ஸ்ரீம் ஈம் அம் ஐயுமென்றே. (௩க)

அ-கூ-௰-தீட்சை.

என்றுநீ யெட்டான தீட்சைகேளு
   வியம்புவாய் சவ்வும் அவ்வும் மவ்வும் ஓமென்று
நன்றுநீ யொன்பதாந் தீட்சைகேளு
   நம் மம் சிம் வம் ஐம் ஓம் நலமாய்த்தானே
யொன்றுநீ பத்தான தீட்சைகேளு
   உம் மம் சம் ஈம் ஓமென்றுறவாய்த்தானே
சென்றிடவே பத்துந்தான் தேவிதீட்சை
   திறமாக தேவிபத்துந் தெளிந்துபாரே. (௩௨)

௰க-தீட்சை.

பாரொன்றேன் பதினொன்றுந் தீட்சைகேளு
   பகருவேன் ஓம் றீம் சம் மம் என்றேதான்
பூரொன்ற பூரணமா மேகதீட்சை
   பூட்டினே னாதார தீட்சையுள்ளே
நேரொன்றேன் பூரணமாம் வாலைதீட்சை
   நிகழ்த்தினேன் கண்டுகொள்ளு நிசமதாகத்
தீரொன்றேன் தீட்சைபத்து மாதாரத்துள்
   திறமாக வொன்றுக்கு வருடமொன்றே. (௩௩)

தீட்சைசெய் மார்க்கம்.

வருடமாந் தசவருட மாருசெய்வார்
   மைந்தனே சித்தரொடு முனிவர்செய்வார்
யரிஷமா யுலகத்தி லுள்ளபேர்கள்
   பந்திகொண் டலைவார்க ளாக்கமாட்டார்

துரிதமா யுரைத்தாலுங் குருக்காணாது
சொல்லுதற்கு வுரைப்பார்கள் நூல்காணாது
புருஷமாய் கோர்வைநூல் கிட்டாவிட்டால்
போக்கென்ன வாசையென்ன பொய்யதாமே. (௩௪)

நூலின் மகத்துவம்.

பொய்யாம லிருக்கவென்று மிந்நூல்வேணும்
புகலரிய தீட்சைக்கு மியோகத்துக்கு
மெய்யான கற்பமுதல் காயசித்தி
விருதான வாதவித்தை குளிகைசித்தி
கையான கைமுறைகள் வாததீட்சைக்
கருவான மறைப்பென்ற சவுக்காரப்போக்கு
உய்யாம னூல்களிலே யொளித்தபாக
மொளியாம லெடுத்துரைத்தே னுண்மையாமே (௩௫)

நூலின்மார்க்கம்.

உண்மையா மிந்நூல்தான் கிட்டாத்தோஷம்
உலகத்தின் மானிடர்க ளுளரிப்போனார்
தண்மையில்லா விந்நூல்யார் கொடுக்கப்போரார்
சாத்திரந்தான் மெத்தவுண்டு சமுசயந்தீராது
வெண்மையாய்ச் சட்டமுனி தீட்சையிருநூறும்
விளம்பினார் வெளியாக வென்றுமூலர்
அண்மையாய்க் கிழித்தாரே ஐயோவையோ
அல்லாம லின்னமொரு ஆகுங்கேளோ (௩௬)

சாபவரலாறு.

ஆகமங்கள் பாடுமுன்னே நவசித்தாதி
யதின்பிறகு நவகோடி கோடாகோடி
பாகமுட னச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிடப் பாலித்தார்காண்
யோகமாய் சாபமிட்டோம் வாமத்துக்கு
மியலான வட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமா யுயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனால்நூல்களெல்லாம்பொய்யாய்ப்போச்சே

நூல்சித்தி.

போச்சுதென் றலையாமல் சிவனுத்தாரம்
பூட்டியே கேட்டுநா னிந்தநூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லா மருளிச்செய்தே
னரகரா சாபங்கள் நிவிர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணாமல்
காச்சுதென்று காச்சிவிட்டே னுலகத்துள்ளே
கண்டவர்க்கிந் நூல்சித்தி முத்தியென்னே. (௫௮)

நூலீயாமை.

முத்தியிது மோட்சமிது சித்திசோடி
முக்யமிது சித்தருக்குங் காட்டொண்ணாது

சத்தியிது சம்புவிது வொன்றுய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்திறர் சாபத்தை நிவர்த்திசெய்து
எத்திறல் நிட்சைதா னௌிதிலாகும்
புத்திபுட னிந்நூல்தா ளுர்க்குங்கிட்டாப்
புண்ணியர்க்கே இதுகிடைக்கும் பொருளேப்பாரே. ()

சாபநிவர்த்தி.

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
பூட்டினேன் சாபமது பொய்யாய்ப்போக
அருளான சிவாயநம அம் உம் என்று
அப்பனே சிம் கிலீம் ஸ்ரீம் ஓம் சியென்று
மருளாமல் ரம் மம் யம் ஓம் என்றேதான்
மாட்டுவா யிலட்சமுரு வேறிற்றுறல்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (சா)

வயிரவர்தியானம்.

இயம்புவேன் வயிரவன்றன் தியானங்கேளு
இயல்பாக யம் நம் லம் ஷம் சிங்கென்றேதான்
சயம்பாக ஷங் வங் மங்கென்று
சாத்தியமாம் வயிரவத்தி ஞம்ந் தானே
நயம்பெறவே பெண்மே மிட்டுத்திரு
நாட்டுவாய் வஸ்துவொடு சுத்திவைத்து.

செயம்பெறவே பூசைசெய் வடைமாலைசாத்தி
சித்திக்குஞ் செய்தொழில்கள் திறமாய்த்தானே. (௪௧)

சுப்ரமண்யர்தியானம்.

திறமாக சுப்ரமண்யர் செபத்தைக்கேளு
செயமாகு மெந்தனுட குருதானப்பா
அறமாகஅம் உம் ஓம் ஸ்ரீம் யீம் சம் வம் சரவணபவதேவா
அறுமுகவா சிவசுப்ரமண்யநமாவென்று [யா
உறவான அறுகோணம் நடுவேவிந்து
உத்தமனே விருத்தமொன்று வாசல்நாலு
நிறமான நால்வாசல் வீரபாகுதேவா
நிச்சயமாய் வைத்துநீ பூசிப்பாயே. (௪௨)

அகஸ்தியர் தியானம்.

பூசிப்பாய் பானமொடு சுத்திவைத்துப்
புகழான சாதிபுஷ்பம் புழுகுபூரம்
ஆசிப்பாய் சுப்ரமண்யர் சித்தியாகு
மப்பனே கேட்டதெல்லா மருளிச்செய்வார்
நேசிப்பா யென்னுடைய தியானந்தன்னை
நினைந்திடவே சித்திவந்து நிலைக்கும்பாரு
வாசிப்பாய் ஓம் சிம் வம் அம் உம் மம் தான்
மகத்தான அகத்தீசா வென்றுகூறே. (௪௩)

பிராணாயம்.

கூறிடுவா யென்குருவே நந்தியென்று
கோணமுமா முக்கோணஞ் சுழினைமீது

ஏறுவாய் பிராணயம் வாசியேறும்
இடகலையாஞ் சந்திரனி லேறுயேறு
பேறுபெற வேண்டிலறுலட்சந்திரு
பிராணயஞ் சித்தியடா யோகசித்தி
ஆறுடனே யாருகும் பன்னிரண்டும்
அப்பனே பூரணத்தி லடங்கிப்போமே. (௩௪)

தூலநிலையாமை.

அடங்கின லாறுதலம் வெளியாய்க்காணு
மதீதமென்ற மேலறு பூரணமுந்தோன்றும்
துடங்கினல் சிவயோகந் துடங்கவேணும்
துரியா தீதந்தனிலே நிற்கவேணும்
நடங்கினல் கூடுவிட்டுச் சீவன்போனல்
நோக்கினதிற் பிறக்குமென்று சொன்னார்முன்னோர்
அடங்கின லொன்றுமில்லை வருவதேது
அச்சடத்தை வாழ்வித்தா லவனேசித்தன். (௩௫)

பிறவிவருதல்.

சித்தனைப் பிறப்பதுதா னென்றக்கால்
செகத்திலே கோடியிலே யொருவனுண்டு
உத்தமொரு விட்டகுறை யென்பதென்ன
வுதித்தகலை யெந்நேர மெண்ணிப்பாரு
பெற்றபே றெப்படித்தான் வந்ததானல்
பிராணனல்லோ பூரணத்திற் சேர்ந்ததாலே

முத்தனு யெடுத்தசடஞ் சித்தியாகு
முன்னுமில்லைப்பின்னுமில்லைமுறையைப்பாரே (சகூ)

கற்பமுண்ணுமுறைமை.

முறையாகக் கற்பத்தைச் சொல்லக்கேளு
மூதண்ட லேகியமும் அயக்காந்தந்தான்
துறையாக வறுசுவையுங் கழற்றுமுன்பே
துரிதமாய்க் கொண்டுவிடு மண்டலந்தான்
நிறையாக வல்லாரை வருஷமொன்று
நேயமாய் கொண்டபின்பு கடுக்காய்கொள்ளு
அறையாம லதின்பிறகு மிளகுகொள்ளு
அதின்பிறகு கொங்கணர்சொல் முறையைக்கொள்ளே

வல்லாரைவிபரம்.

கொள்ளுதற்கு வல்லாரை முறையைக்கேளு
குழிவெட்டிக் கறுப்பேற்றிப் பயிரேசெய்து
விள்ளுகிறே னிதையெடுத்துக் காடிவார்த்து
வெண்மைபெறக் கழுவியே நிழலிற்போடு
உள்ளுறவே யுலர்ந்தபின்பு யிடித்துத்தூளா
யுத்தமனே புதுக்கலசந் தன்னில்வைத்து
தெள்ளுறவே காடியிலே தின்னவேணுஞ்
செப்புகிறேன் காடிவைக்கச் செய்கையென்னே (சஅ)

காடிவைப்பு.

என்னவே கருங்குருவை நெல்லைக்குத்தி
யியலான புதுப்பானை தனிற்சமைத்து

வன்னமாய்ச் சுத்தசல மதனில்வார்த்து
வைத்திடுவாய் மண்டலந்தான் வேடுகட்டி
சொன்னதொரு வெய்யிலிலே தினமும்வைத்துச்
சுருதியாய் மறுபானை பகுந்துமூடி
முன்னுள்ள பாண்டத்தை யனலிற்காச்சி
முறையாக வதிலிட்டு சுத்தசலம்வாரே. (௪௯)

காடி மகத்துவம்.

செலம்வார்த்துப் பின்னுமதை ரவியில்வைத்துச்
செய்திடுவாய் மண்டலத்துக் கொருசோறுக
நலமாக வெவ்வேறே பகுந்துகாச்சி
நாட்டியே வெயிலில்வைத்து ஆறுமாதம்
பெலமான காடியிது வல்லாரைக்குப்
பேசாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
அலையாமல் வல்லாரைச் சூரணத்தை
யழகான புன்னைக்கா யளவுகொள்ளே. (௫0)

கொள்ளடா சமாதியிலே யிருக்கும்போது
கூறுகப் பூசித்து தீட்சையோதி
விள்ளடா வெயிலுடனே காற்றுமாகா
மேனியது வுலவாகா கிலேசமாகா
தள்ளடா வெண்ணெய்சுண்ணம் கடுகுவுள்ளி
தாரணியில் பெண்மாய்கை சற்றுமாகா
கள்ளடா வாகாது கஞ்சாவாகா
காசினியின் மீன்இறச்சி யாகாநீக்கே. (௫௧)

அடக்கம்.

நீக்குவது புளியோடு இலைப்புழுப்பும்
நிலையான வுறக்கமொடு கோபமாகா
ஆக்குவது சுணையாகா பொய்புமாகா
அப்பனே மனமொன்ருய்ப் புத்தியொன்ருய்த்
தாக்கவரு மாய்கையெல்லா மடித்துத்தள்ளு
சதாநித்தம் பூரணத்தி லகலாமல்நில்லு
போக்குவது பரத்தையேநீ போக்கினுக்கால்
புகழான சிவயோகம் புனிதமாமே. (ருஉ)

யோகநித்திரை.

புனிதமா யுறங்கவென்ருல் வலக்கைமேலே
பூட்டாகக் கால்நீட்டிப் பூரணத்தைநோக்கி
யனிதமாய்க் கேசரத்தில் மனத்தைவைத்து
அப்பனே லாடத்தே தூங்கவேணும்
மனிதனுய்ப் பிறந்தக்கால் சாகாக்கல்வி
வாசிக்குஞ் சிவயோக வாழ்க்கைசேர்வான்
செனிதமாஞ் சண்டாளப் பிறலோர்கள்
செத்திறந்து செனிப்பார்கள் செகத்திற்ருனே. (ருங)

கற்பத்துக்குப்பத்தியபாகம்.

செனியாமல் கற்பங்கள் கொள்ளும்போது
திரிகடுகு திரிபலையுஞ் சீரகம்லமம்
கனியான சாதிக்காய் கிரும்புபத்திரி
கருவேப் பிலையோடு ஆவினெய்பால்

தனியான சருக்கரைதேன் வாகுருவைபரிசி
சதுரான தூதுவளை புளியாரையோடு
கனியான சிறுகீரை சிறுபயறுமாகுங்
கட்டியதோ ருப்பாகுங் கொறுக்கையாமே. (ருச)

கடுக்காய்க்கற்பம்

ஆகுமே கற்பூரச் சிலையின்சுண்ணம்
அண்டமொடு கல்நாருந் தங்கச்சுண்ணம்
வாகுடனே யான்சொன்னேன் மற்முென்றுமாகா
வகையாக இந்தமுறை கற்பங்கொள்ளு
மோகமாய்க் கடுக்காயின் முறையைக்கேளு
முயல்வாகச் செங்கடுக்காய் பொற்காய்வாங்கி
பாகமா யிடித்ததனைச் சூரணித்துப்
பாச்சுதற்கு சிற்றேரண் டெண்ணெய்வாங்கே (ருரு)

நயனக்குறி.

எண்ணெயது வுழக்கடா பொடிதானுழி
யியல்பாக விட்டதனை மைபோற்கிண்டி
கண்ணுன பிங்கானில் பூதனம்பண்ணி
கனமான புன்னைக்கா யளவுகொள்ளு
விண்ணதனை நித்தநித்தங் கண்ணேட்டம்பார்
வெளிநிற்குஞ் சுழினையிலே வாசியேறுங்
கண்ணதனை முறுக்கியே யேறப்பாரு
கபாலத்தில் அமுர்தமது கனிந்துபாயும். (ருசா)

கபசுத்தி.

பாயுமே சுழினைதனைத் திறப்பதற்குப்
பகருகிறேன் கற்பமொன்று பரிவாய்த்தானே
காயுமே கரிசாலைச் சாறுநாழி
கருதியதோர் நெய்நாழி கலந்துகாச்சி
வாயுமே மெழுகுபதந் தன்னிலேதான்
வடித்துவைத்துக் கைப்பெருவிரலிற்றடவிப்
பாயுமே யுண்ணாக்கிற் புரளவைத்துப்
பழகவே கபமெல்லா மற்றுப்போமே. (ருஎ)

மூலசுத்தி.

அற்றுவிடும் இரண்டுவிரல் வாயிலோட்டி
யனலான கபமெல்லாம் கக்குங்கக்கு
மற்றுமினி மூலத்தின் சுத்திகேளு
வாகான குமரிச்சாற் சிற்றேரண்டெண்ணெய்
யுற்றதனை முன்போலே காச்சிக்கொண்டு
வுறவாக நடுவிரலில் தோய்த்துக்கொண்டு
சுற்றிவிடு மூலத்தின் மலமெல்லாந்தான்
சுகமாகக் கீழ்நோக்கும் சுத்தியாமே. (ருஅ)

குறி—மிளகுகற்பம்.

சுத்தியா யிருநேரம் நாட்டம்பாரு
சுழிதிறக்கும் பூரணத்தில் சொக்கிப்போமே
பத்தியா யமுர்தங் கண்டிறந்துபாயும்
பாவிகட்கும் இக்கருவைப் பகரலாமோ

வெற்றியாக மிளகினுட கற்பங்கொள்ள
விபரமதைச் சொல்லுகிறேன் விரித்துநன்றாய்ச்
சித்தியாங் கன்மினாகாய்த் தெரிந்தெடுத்துச்
சிறப்பான வமுரிதனை தேத்தாம்வித்தால். (ருகூ)

மிளகுசுத்தி — மூதண்டம்.

வித்தாலே முறித்ததனை தெளியவைத்து
விதமாக ஐயைந்தாய்த் தினமுமேற்று
முத்தான வமுரியுடன் கொள்ளும்போது
முக்யமடா நூறுக்கு மதிகம்வேண்டாம்
கொத்தான உஷ்டணந்தான் மிஞ்சிற்றானால்
கூறிலொரு படியாகுஞ் செலத்தினுள்ளே
சுத்தான் அறுகின்வேர் பிடிதானென்று
சொல்லுகிறேன் மிளகதுதா னிருபத்தைந்தே. (கூய)

மூதண்டமகத்துவம்.

அஞ்சாமற் காய்ந்ததுதா னுழக்கேயாறு
லப்பனே பசுவெண்ணெய் பாக்களவுபோட்டு
மிஞ்சாமற் கொண்டிடவே வெப்புத்திரும்
விருதான கியாழமிது மெத்தநன்று
நஞ்சுண்ட சிவனன்று கற்பங்கொண்டு
நாதனார் சடைமீது தரித்தகற்பம்
பஞ்சகண பதிமூல வறுகிதப்பா
பார்த்தக்கா லிதன்பெருமைப் பகரொண்ணாதே. (கூக)

மறுகற்பம்.

ஒன்றான அபக்காந்தங் கொண்டபின்பு
வுத்தமனே யறுசுவையுங் கழற்றிப்போடு
கன்றான வல்லாரை கடுக்காயோடு
கனமான மிளகோடு மறுகற்பங்கொள்
நன்றான சட்டமுனி சொன்னமார்க்கம்
நலமாகக் கொண்டுவிட காயசித்தி
விண்டான கெவுனசித்தி யோகசித்தி
வேண்டியதோ ரட்டமா சித்தியாமே. (கூ௨)

கற்பமுண்ணுமுன் பக்குவம்.

ஆமென்ற மூலியெல்லாங் கறுப்பேற்றிக்கொள்
அப்பனே உன்திரேகம் பெலத்துப்போச்சு
ஓமென்ற கற்பங்க ளுண்ணும்போது
வுடலிலே நோய்வந்தால் முந்நூற்றுள்ளே
தாமென்ற செந்தூரம் லேகியங்கள்
தப்பாமற் செய்துவைத்துப் பின்னேகற்பம்
நாமென்று நோய்கள்வந்தால் செந்தூரத்தை
நாட்டிடவே நோய்தீரும் நளினமாமே. (கூ௩)

கற்பமுண்ணக்காலம்.

நளினமாய்க் கற்பங்கள் கொள்வதற்கு
நலமான காலத்தைச் சொல்லக்கேளு
தெளிவான கார்த்திகையு மார்கழியுமாகா
திறமான வறுசுவையுங் கழற்றிப்போடு

சாறான வல்லாரைத் தொடுத்துக்கொள்ளு
சுகமான கிநிக்காய்தான் ஆனிமாதம்
அழியாம லானியிலே மிளகுகொள்ளு
அப்பனே புதையத்திற் சரீரசுத்தி
யொளியாமல் கட்டளையை முகித்துக்கொண்டு
வுதையாதி மூன்றுக்குங் கற்பந்தின்னே. (கூச)

பத்தியமுண்ணுங்காலம்—கலை.

கற்பந்தான் தின்பதற்கு மூன்றேமுக்கால்
கடந்தபின்பு பத்தியங்கொள் கனலேறுது
உற்பனமாங் கற்பத்தைச் சூரியனிற்கொள்ளு
உண்பதுவு முறங்குவதுமொன்றேமார்க்கம்
நற்புடனே பூசைசெய்வார் காலமூன்றும்
நாளொன்றுக் கிருநேரம் நாட்டம்பாரு
சொற்பமென்ற பெண்ணாசை விட்டாலுந்தான்
சுகமான சயனத்தில் பெண்தான்வந்தே. (கூரு)

சயனமாய்கை—வாசிகுறி.

வந்துதான் மருவிடவே விந்துவீழு
மகத்தான தபமெல்லா மழிந்துபோகுங்
கொந்துதா னழியாமல் நினைவாய்த்தூங்கு
குறியான புருவமையங் குறியைப்பாரு
வெந்துதான் போகுமடா மூலத்திதான்
மேற்கொண்டால் மாயையெல்லாம் வெளியுமாகும்

உந்தித்தான் பசியாம லிருக்கவென்று
துறைப்பான வாசிகொண்டு வமுர்தமுண்ணே. (௨௬)

கற்பமுண்ண—அறிவு.

உண்ணுவது சார்தகமாய்த் தள்ளவேணு
முற்றஅறு சுவைபதனை நீக்கவேணும்
பண்ணுவது சிவயோகம் பண்ணவேணும்
பார்வதியுஞ் சிவனுடைய திட்சைவேணும்
எண்ணுவது மிதுகளெல்லா மிந்நூல்வேணு
மிறவாம லிருக்கவென்றால் கற்பம்வேணும்
கண்ணுவது கற்பமுண்ணப் பாத்திரங்கள்
காந்தத்தி னருமைதனைக் காட்டுறேனே. (௨௭)

காந்தபாத்திரப்பெருமை.

காட்டுகிறேன் காந்தமது முந்நூற்றுள்ளே
கலந்துரைத்த படியுருக்கிக் கருவில்வாரு
மூட்டுகிறேன் கிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
முனையான கிண்ணியிலே பாலைவார்த்தால்
ஆட்டுகிறேன் பொங்கியது மேலேநிற்கு
மப்பனே காந்தத்தி னதிகம்பாரு
நாட்டுகிறேன் தயிர்போலா மந்தப்பாலை
நலமாகக் கொண்டிடநோய் நாடாதென்னே. (௨௮)

நாட்டாத கிண்ணியிலே கற்பமுண்ணு
நலமான வமுதுண்ணு பாலுமுண்ணு
தேடாத நெய்தேனு முண்ணலாகும்

தினந்தோறுங் கொண்டக்கால் சித்தியாகும்
ஓடாது விந்துவது கீழ்நோக்காது
உறக்கந்தா னதுவுங் கட்டிப்போகுங்
கூடாத சித்தியெல்லாங் கூடுங்கூடுங்
குறிப்பான ரசமணியின் கூறுகேளே. (௬௯)

ரசமணி.

கூறான காந்தத்தின் கிண்ணத்துள்ளே
கொட்டியதோ ரசத்தையின்னங் கூறக்கேளு
வீறான கருமத்தஞ் சாறுவிட்டு
வேகிறதோர் சுடுசோற்றுக் குள்ளேவைத்தால்
வேறான வாணை விறிட்டுச்சாகும்
வெள்ளியம் போலுந்தான் வலுத்துப்போகும்
பேறாக வெடுத்துமணி பதினாறாக்கிப்
பேணியே செபஞ்செய்ய வெட்டுமாமே. (௭௰)

மணித்தொழில்.

ஆடுகிற மணியதனை சாரணையிற்றீர்ந்தா
லண்டரண்டஞ் சுத்திவருங் கெவுனமாகுங்
கூடுகின்ற பெண்ணோடே வாயிலிட்டால்
குடிகெடுத்த விந்துவது கட்டிப்போகுந்
தேடுகின்ற தேட்டெல்லாம் ரசமணிதானப்பா
தேடவென்றால் காந்தத்தின் கிண்ணங்கிண்ணம்
ஓடுகின்ற வோட்டெல்லாங் காந்தத்தாலே
யுத்தமனே கற்பத்துக் குறுதியாமே. (௭௧)

அருளீதல்.

ஆமிந்த வுறுதிசொல்லார் சித்தரெல்லா
மாதிதொடுத் தந்தவரை யழகாய்ச்சொன்னேன்
ஓமிந்த நூல்போலார் வெளியாய்ச்சொன்ன
ரொளித்திட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
நாமிந்த நூல்வழியாய்ச் சொன்னதென்ன
நாட்டிலுள்ளோ ரெல்லாரு மாண்டுபோவார்
சாமிந்தப் படியானல் தோஷமென்று
தாக்கினேன் பூரணத்தில் சாயுச்யந்தானே. (எ௨)

சமாதிகட்டும்வகை.

சாயுச்ய மாவதற்குச் சமாதிகேளு
சஞ்சார சமாதியது மவுனிக்காகும்
நீயுச்ய மாகவென்றால் கருவைக்கேளு
நினைத்தகுகை யாதாரம் போலுண்டாக்கி
மாயுச்ய மாயதிலே பற்பம்போட்டு
மைந்தனே யதிலிருந்து கற்பமுண்ணு
வாயுச்ய மானதொரு யோகம்பாரு
வளமான சித்திவந்தால் மலையிலேறே. (எ௩)

சித்தராகும்பருவம்.

ஏறியே யென்னைவந்து கண்டாயானு
லேயலான சித்தனென்று பேருமீய்வோம்
மாறியே மலைகளிலே சித்தர்கோடி
மாறாட்டஞ் செய்திடுவார் மருவவேண்டாம்

தேறியே பொதிகையிலே முன்னேவந்து
சித்தனென்று பேர்வந்து முத்திரையும்வாங்கி
யேறியே மலைகளிலே நடக்கலாகு
மித்தனைக்கும் வருவதுதா னருமைதானே. (௭௪)

சிவவேடவகை.

அருமையென்ற சிவயோகம் வந்ததாகு
லதிகமாஞ் சித்தருக்கு ரூபங்கேளு
பெருமையென்ற சட்டையொன்று பிரம்பொன்று
பேரான படிகமணி குண்டலத்தினோடு
கருமையென்ற வுப்பினுட சரந்தான்கையில்
சட்டையுண்டு கயிலாய வற்கமானல்
அருமையென்ற விபூதியுற் றளவுமாகி
யப்பனே யோகதண்டு நம்முத்திரைகாணே. (௭௫)

அகத்தியர்வேடம்—மூலகுருவேடம்.

நம்முடைய முத்திரைதா னிடைகாஷாயம்
நாதனுட முத்திரைதான் சிரசிலாகும்
நம்முடைய வற்கத்திற் படிகலிங்கந்
தருவான கமண்டலமுந் தரிப்பார்பாரு
அம்முடைய தீட்சைவிதி யோகமார்க்க
மானந்த மூலகுருவேடம்பாரு
கும்மென்ற மேருவுக்குத் தெற்கேகேளு
கோடான கோடிசித்தர் கூடினரே. (௭௬)

சித்தர்களிடம்—உருவு.

மேரு—நாலுதிக்கிலுள்ளசித்தர் ரூபம்.

கூடினார் மேற்கிலுள்ள சித்தர்கோடி
 கூர்ப்பான வயதிருபத் திருநூறப்பா
தேடினால் வளர்த்தி முழம்நாற்பதாகுந்
 சித்திக்கு மேருவுக்கு வடக்கேகேளு
நாடினால் வளர்த்தியது நானூறாகும்
 நலமான மூன்றுதிசை சித்தருக்கு
ஊடினார் கிழக்கதிலே வுரைக்கக்கேளு
 வுத்தமனே வளர்த்தியது நாநூறெண்ணே. (௭௭)

நூறாகும் வயததுதான் முன்னிரட்டி
 நூதனமா யிருப்பார்கள் கோடாகோடி
பேறாகுந் தெற்கிலுள்ள சித்தரெல்லாம்
 பெருமைமெத்தப் பெருமைமெத்தப் பேசப்போகா
ஆறாகும் நாலுதிசை சித்தருக்கு
 அடையாள மென்னுடைய காஷாயமாகும்
வீறாருஞ் சித்தருக்கு மகுத்வந்தான்மெத்த
 மெஞ்ஞானி சொரூபமடா விளாந்துபாரே. (௭௮)

பூசைவிதி—பிராணாயம்.

விளாந்துகற்ப முண்ணயிலே முடிவளர்க்கவேண்டாம்
 விடிவேரு பல்விளக்கி நாக்குத்தேய்த்து
திளாந்துவரும் வழலைசுத்தி மூன்றுஞ்செய்து
 திருநீற்றை யுற்றளமா யணிந்துகொண்டு

பரந்த அங்கன்னியாசம் கர்ன்னியாசம்
பரிவான சடங்கமது பிராணாயந்தான்
உரந்துவருங் காயத்ரி தற்பணமுமோமம்
உருவேற்று மட்டகர்மஞ் சிவபூசையாமே. (௭௧)

புத்தி.

பூசையிலே வைத்தெடுத்துக் கற்பமுண்ணு
புகழாகச் சித்திக்கும் பேறுண்டாகும்
ஆசையிலே பேரின்ப மடுத்தாயானு
லற்பமன தின்மாய்கை நீக்கிப்போடு
வேசியைப்பேர் லாசைகொண்டா லெல்லாம்போச்சு
வேதாந்தம் நீயென்று மொருமனதாய்நில்லு
காசில்லை யென்றுசொல்லி விட்டிடாதே
கற்பமுண்டால் வாதசித்திகைக்குள்ளாமே. (௭௨)

சுத்திமார்க்கம்.

கைக்குள்ளாய் வாதசித்தி வருகவென்றல்
கருவையெல்லாஞ் சொல்லுகிறேன் கனிந்துகேளு
மெய்க்குள்ளா யைம்பதுக்குள் சொன்னேனப்பூ
வெளியாகச் சொல்லிவிட்டேன் சுத்தியில்லை
முக்கியமாஞ் சுத்திதனைச் சொல்லக்கேளு
முப்பத்தி ரண்டென்று கொங்கணர்தான்சொன்னார்
நொக்கிலே சொல்கிறேன் நீகேளுகேளு
சுத்தியுட சுப்பிரதத்தைச் சுருக்கித்தானே. (௭௩)

முப்பூசுத்தி.

சுருக்கியே சொல்லுகிறேன் முப்பூவப்பா
துாக்குவாய் வகையொன்று பலமொன்ருகச்
செருக்கியே பனிவிளைந்த நீரைவாங்கித்
தெளித்துநீ வைத்திடுவாய் வெவ்வேருக
நெருக்கியே வெய்யிலிலே காயக்காய
நேராக வொன்றுக்குப் பத்துநாள்தான்
தருக்கியே வகையொன்று சலம்படிதானென்று
தூக்கியே வெய்யிலிலே காய்ந்தபின்னே. (அ௨)

காய்ந்ததின்மே லின்னமொரு சுத்திகேளு
காசினியி லமுரியினுல் முன்போற்காச்சு
வாய்ந்தபின்பு தேசியின்னீர் தன்னில்முன்போல்
வளமான சாரநீர் தன்னில்முன்போல்
ஏய்ந்தபின்பு முப்பூவு மொன்ருய்ச்சேர்த்து
விதமான கிளிஞ்சிநீர் படிதான்வாங்கி
பாய்ந்திடவே பத்துமுறை தெளித்துநீயும்
பரிவாக வற்றவற்றத் தெளியக்காச்சே. (அ௩)

வெடியுப்புச் செயநீர்.

காச்சியபின் இன்னமொரு கருவைக்கேளு
கனமான வெடியுப்புப் புளியுங்கூட்டி
வாச்சுதே யிடித்துநன்ருய்த் தீயைமூட்டி
வளமாக நீற்றியிதைச் சுண்ணம்பாக்கிப்
பாச்சுவாய் நாழிலொன்று சாரந்தானும்

பரிவாகப் பொடித்துநன்றாய் பனியில்வைக்க
ஆச்சியாஞ் செயநீரா மந்நீர்தன்னை
அரைப்படிதான் வாங்கிவைத்து அறையக்கேளே. ( )

முப்பூச்சுண்ணம்.

கேளப்பா வீரமொடு பூரஞ்சீனங்
கெடியான வுரமுடனே குருவண்டுநாபி
சூளப்பா வகையொன்று கழஞ்சியொன்று
கூட்டியே பொடித்தந்த நீரில்ப்போடு
நாளப்பா விருந்துடனே சிவந்துபோகும்
நலமான செயநீரில் போட்டுக்காச்சு
தேளப்பா கொட்டியதோர் சுண்ணமாச்சு
திடமாக யிடைக்கிடைதான் சூடன்சேரே. (அ௩)

சூடச்சுண்ணம்.

சூடனுக்கு நேர்பாதி வீரங்கூட்டி
சுகமான புழுகதிலே கழஞ்சுகூட்டி
தேடுகின்ற வெடியுப்பு நீராலாட்டி
சிறப்பாக வில்லைசெய்து ரவியிற்போடு
நாடவே காய்ந்தபின் போட்டில்வைத்துமூடி
நலமாகச் சந்துவாய் சீலைசெய்து
போடவே முழப்புடத்திற் சுண்ணமாகும்
போக்கதிலே சொல்லுகிறேன் புகழ்ந்துபாரே. (அ௪)

துரிசிச்சுண்ணம்.

புகழான சுண்ணத்தில் மஞ்சாடிவாங்கி

பூசுவாய் துரிசிக்கு வாய்நீராலே
சுசமான வெய்யிலிலே காயவைத்துச்
சொல்லுகிறேன் பூநீற்றில் சீலேசுற்றி
பசமான வோட்டில்வைத்து வோடுமூடி
பப்பனே சந்துவாய் சீலேசெய்து
மூசமான மூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமாய் நீறும்பின் பெடுத்துக்கொள்ளே. (அ௭)

தாளகச்சுண்ணம்.

எடுத்ததொரு துரிசிநீர் வேகமெத்த
யென்சொல்வே னிரதத்தைச் சண்ணிக்கொல்லும்
அடுத்ததொரு துரிசிநீர் விரங்கூட்டி
அழகான தாளகத்தி லப்பிப்போடத்
தொடுத்ததொரு புடத்தினிலே வெளுத்துநீறுந்
சுகமான வுபசரங்க ளியமாகுங்
கொடுத்திடவே பத்தரையுந் தப்பாதப்பா
கோடான கோடிகவ ராடும்பாரே. (அ௮)

நூலின்பெருமை.

ஆடியதோர் முப்பூவின் கருவையெல்லா
மறைப்பற்றுச் சொல்லிவிட்டே னலேயவேண்டாம்
தேடியதோர் கருக்களெல்லாம் வெளியாய்ப்போச்சு
செகத்திலே கிட்டுகிலோ சித்தராச்சு
மூடியதோர் கருவெல்லாந் துறந்தேனென்று
மோசமென் றிந்நூலே யொளித்திட்டார்கள்

காடியே நானெடுத்துப் பாவநாச
நற்றீர்த்தக் கரைதனிலே வைத்திட்டேனே. (௪௯)

நூல்வந்தவழி.

வைத்திட்ட நூலெடுத்தா னொருவேளாளன்
வந்துதடா யிப்படித்தா னுலகத்துள்ளே
சைத்திட்ட மானபல னிந்தநூல்தான்
சீசருக்கும் பசகளுக்குங் காணுதோடும்
பொய்த்திட்ட சாத்திரங்க ளெல்லாமெய்தான்
போக்கறிய விந்நூலைப் பேணிப்பாரு
மெய்திட்ட கருவெல்லாந் தோயுந்தோயு
மீசுரனுந் தேவியுந்தா னிறைஞ்சுவாரே. (௫௰)

சவுக்காரவைப்பு.

இறைஞ்சுவார் சவுக்கார வைப்பைக்கேளாய்
யியலான உவருப்பு அமரியுப்பு
மறைவான கல்லுப்பு வெடியுப்போடு
மருவியதோர் கல்லானைக் கிளிஞ்சிச்சுண்ணம்
நிறமான சூட்டொடு பாறையுப்பு
நேராகச் சட்டமுனி கொங்கணர்தான் சொன்னார்
குறையாம லம்முறைக்கு வைத்துக்கொண்டு
கூசாமல் சட்டமுனி சொன்னமார்க்கம். (௫௧)

சொன்னபடி யெண்ணைதனைக் கழற்றிப்போடு
சூட்சமாய்க் கடுங்கார மேற்றியேதான்
நன்னயமாய் கல்லுப்பைக் கட்டிக்கொண்டு

நலமான வித்தையெல்லா மாடிப்பாரு
பொன்னதிலே யுண்டாகுங் குளிகைகட்டி
பொதிகைதனில் வந்தென்னைக் கண்டுசேவி
பின்னமொரு சேதியுண்டு சொல்லக்கேளு
பிதமான வறுசுவையுங் கழற்றுவாயே. (௱௨)

சுந்தரானந்தர் முறை கற்பம்.

கழற்றுவாய் சுந்தரன்றன் நூலைப்பார்த்துக்
கடுக்காயைக் கொண்டுவிடு வருஷமொன்று
சாத்துடனே மிளகுதனைக் கொண்டாயானால்
சடத்திலுள்ள நோயெல்லாந் தானேபோச்சு
கழற்றுகின்ற நூல்களெல்லாஞ் சுருக்கிச்சொல்வேன்
றுடியான வல்லாரைக் கற்பத்தேதான்
பிளைத்துநீ போகாமல் வருடங்கொண்டா
லிருத்துமடா யிருநூறுண் டிருந்துகாணே. (௱௩)

குளிகைசெய்கை.

ஆண்டிருக்கச் செய்துகொண்டு வயக்காந்தத்தை
யப்பனே. கொண்டுவிடு வருடமொன்று
பூண்டிருக்கும் பிறகுகொள்ளு கற்பமெல்லாம்
புகழாக முப்பூவை முடிந்துக்கொண்டு
ஏன்றதொரு வேதைதனைக் கண்டுகொண்டு
யிரதமென்ற ஆனைதனைக் குளிகைசெய்து
மூன்றதொரு குளிகைக்குச் சாரணைதான்றீர்க்கு
முன்பாகத் தங்கமொடு சூதங்கூட்டே. (௱௪)

இரசச் செந்தூரம்.

கூட்டியே கெந்திதனைக் குப்பிக்கேற்றி
குலாவியே செந்தூரஞ் செய்துக்கொண்டு
நாட்டியே வருடமொன்று கொண்டாயானால்
நமனில்லை கோடிவரை யிருத்தும்பாரு
பூட்டியே வாசிதன்னைக் கூட்டிக்கொண்டு
புதுமையுள்ள மலைமேலே யேறியேதான்
ஆட்டியே மலையிலுள்ள கற்பங்கொள்ளு
அதிகமாய் ரிஷிகளைநீ தெரிசித்தேதான். (௬௫)

சித்தரைக்காண தியானம்.

அடுக்கும் வகை.

தெரிசிக்கத் தியானமொன்று சொல்லக்கேளாய்
சிவாயநம ஓம் கிலீம் என்றுசேவி
வரிசிக்குஞ் சித்தரெல்லாம் வெளியிற்காணுவர்
மகத்தான சித்தரப்பா வணங்கிநில்லு
பரிசிருக்கும் படியவரைக் கண்டாயானால்
பணிந்திடுவாய் பாதத்திற் சிரசுதட்ட
கிரிசிக்கும் ஆர்நாலில் சார்ந்தாயென்று
கேட்கிலகத் தீசுரர்தன் கிருபையென்னே. (௬௬)

சித்தர் மகத்துவமளித்தல்.

என்னுடைய பேர்சொல்லில் கூட்டிக்கொண்டே
யிசையான பொதிகையிலே யேறுவார்பார்

உன்னுடைய திறங்கண்ட போதுதானே
யுறுதியுள்ள சித்தனென்று பேருமீய்வேன்
மின்னுடைய வொளிகாட்டி யறுதலமுங்காட்டி
மெஞ்ஞான வீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடைய சிதம்பரமு மேருபூசைப்
பாலிப்போ மஷ்டாங்கம் பரிந்துகாணே. (௩௯)

யோகிகளுக் கிருப்பிட விசேட தலம்.

பரிவான யோகிக்குத் தலத்தைக்கேளாய்ப்
பகருவேன் காசிவரை கன்னிமட்டுந்
தெரிவான மலைச்சார்பு மெத்தநன்று
தேசத்தில் நாடதிகஞ் சோளதேசம்
அரிதான பாண்டியிலே வைகைநாடு
அடுத்ததொரு கள்ளர்பத்து அழகர்கோவில்
உரிதான திண்டுக்கல் காளையார்கோவி
லுறவான மதுரையொடு குன்றூருமே. (௪௦)
ஆறான தாம்பிரவேணி கரைப்போக்கெல்லா
மாமடா வெகுசித்தி பொதிகைச்சார்பு
கூறான சிதம்பரமுங் காவேரிப்போக்குங்
கொள்ளுகிற கற்பமெல்லாஞ் சித்தியாகும்
நாறான கன்னியிலே குமரிநின்றாள்
நற்பனமாய் வாலையடா அவள்தானப்பா
பேறுருகும் நான்சொன்ன தலங்களுக்குப்
பேதமில்லைப் பேதமுண்டு பேசுகிறேனே. (௪௧)

பேதபூமி.

பேசுவ்து சமுத்திரத்துக் கப்பாற்பத்துப்
பேரான கடிகையது மேற்கேசென்று
வீசுறதோர் கற்பங்க ளுண்ணவேணும்
மெஞ்ஞானிக் கெங்குமாம் வேதாந்திக்கும்
ஆசுறதோர் தலமதிகம் நிலமதிகம்பாரு
அப்பனே குளிர்ந்ததல மாகுமாகுங்
கூசுறதோ ரென்னவென்றால் ராசநீதங்
குவலயத்தில் மனுநீதங் கொள்கைபாரே. (ர)

யுத்தி.

பாரப்பா சமாதியிலே யிருக்கும்போதும்
பலபலவாந் தொழில்முறைகள் செய்யும்போதும்
நேரப்பா பலகூட்டங் கூடலாகா
நெறிகெட்ட சீடர்களைச் சேர்க்கலாகா
ஆரப்பா தனியேதா னிருந்துக்கொண்டு
அளவறந்த வித்தையெல்லா மாடுமாடு
சீரப்பா தேகசித்தி யோகசித்தி
செயமான மலைகளிலே சேர்ந்துகொள்ளே. (ரச)

பூமிஞதம் விளைபூமி.

கொள்ளென்ற குமரிக்கு மேற்கேகேளாய்
கூறுவேன் பதிங்காதங் குணமாம்பூமி
விள்ளென்ற பூமிதனிற் பூமிஞதம்
விளைந்தெடுக்குந்தலங்களையான்விரித்துச்சொல்வேன்

யுள்ளென்ற காசிக்குந் தெற்கேபத்து
வுறவான கடிகைக்குட் பூமியொன்று
யெள்ளென்ற பூமிக்குக் கிழக்கேதானு
மிருபதுநா ழிகைக்குள்ளே தலமொன்றுண்டே. (௭௨

உண்டப்பா முன்சொன்ன தலத்துக்கப்பால்
யோசனைதா னென்றுசென்றால் தலமொன்றுண்டு
நன்றப்பா வதின்பிறகு மேற்கேசென்றால்
நலமான கடிகைபத்து மலைச்சார்புக்குள்
சென்றப்பா பார்த்தக்கால் தலமொன்றுண்டு
சித்தருட் நடமாட்டஞ் சொல்லப்போகா
இன்றப்பா சொல்லுகிறேன் விலாடபுரந்தன்னில்
வெகுவீதி யொருதலந்தான் விசாலமெத்தவாமே. (

தலவிசேடமகத்துவம்.

மெத்தவடா டில்லிக்கு மேற்கதாக
விருதான தலங்களுண்டு மேவிப்பாரு
சித்தரப்பா கஞ்சமலைச் சித்தர்வாழ்க்கை
திரண்டதொரு மலையுண்டு வதற்குளப்பா
வுத்தமமாங் குருநாட்டில் ஞாலந்தானென்று
வுயர்ந்தமலை யதுதானே சித்தருக்கு
வெற்றியுள்ள கன்னடியர் தேசந்தன்னில்
மேலான வயிந்தநகர் தலந்தானென்றே. (௭௪

தலமான ஆற்காட்டின் மேற்கேபத்து
சார்ந்தக்கா லங்ஙனே தலமொன்றுண்டு

பெலமான காவேரி பூமிதன்னில்
பெருத்ததொரு தலமொன்று சீரங்கத்தில்
நிலமான கோகரணத்துக் கப்பாலேதான்
நெடுந்தூரஞ் சென்றக்கால் தலமொன்றுண்டு
குலமான திண்டுக்கல் தேசந்தன்னில்
குணமான தலமொன்று கூர்ந்துபாரே. (௯௫)

கூர்ந்துபார் கள்ளருட தேசந்தன்னில்
குணமான தலமொன்று வள்ளலூரில்
சேர்ந்துபார் மதுரைக்குத் தெற்கதாகத்
திறமான கடிகைபத்துக் கப்பாலொன்று
ஆர்ந்துபா ரதுக்கப்பால் கடிகையைந்து
மெல்கயிலே தலமொன்று மிருக்கும்பாரு
சேர்ந்துபார் மதுரைக்குக் கிழக்கேயப்பா
சேர்ந்துபத்துக்காதத்துக் கப்பாற்செல்லே. (௯௬)

செல்லவே விளையல்செய்யும் பேர்களுண்டு
செயமான தலமதிகஞ் சேர்ந்துபாரு
மெல்லவே யதின்கிழக்கு மறவர்நாட்டில்
மெகுதலங்க ளுண்டு சமுத்திரம் வரைக்கும்
நல்லதொரு கல்லுப்புக் கடலிலுண்டு
நலமான சமுத்திரத்தின் ஸ்ரீராமர்பிரதிஷ்டை
வல்லதொரு நாட்டுக்குள் தலமொன்றுண்டு
மைந்தனே தாம்பிரவேணி வளமைமேலே. (௯௭)

ஆற்றின்கரைபூமிவளமை.

வளமையா மாற்றினிட கரைப்போக்கெல்லாம்
வரகான நாலாறு தலங்களுண்டு
இளமையா மதின்தெற்குக் குமரிவரைமேலாய்
ஏழுதல முண்டப்பா வதற்குமப்பால்
பழமையாங் குறவுருட தேசந்தன்னிற்
பதிவான தலமுண்டு கிட்டக்கிட்ட
உளமையாந் தலங்கள்ரொம்ப யிதல்லாமல்
உறைப்பான பூவெல்லா முற்றுப்பாரே. (௱௩)

சலாசத்து—பொன்னப்பிரகம்—வெள்ளை
யப்பிரகபூமி.

பாரப்பா சலாசத்து விளையும்பூமி
பரிவான குமரிக்குங் கிழக்கதாக
நேரப்பா காதமது பத்துச்சென்றால்
நிலத்திலே வெட்டியே யெடுப்பார்பாரு
சீரப்பா பொன்னென்ற வப்பிரகந்தான்
தென்காசிக் கடுத்ததிலே தலந்தானென்று
வேரப்பா வெள்ளையென்ற வப்பிரகந்தான்
ரிதிசதுர கிரிக்கடுக்க விளையும்பாரே. (௱௪)

பொன்னிமிளை—மூவிலைகுருந்து—சோதிவிருக்ஷம்,
வெண்சாரை.

விளையுமடா கிழக்காகக் காதமூன்றில்
வெகுவிதமாம் பொன்னிமிளை விளையும்பூமி

தோயுமடா பொதிகைமலைச் சார்புதன்னில்
தாம்பிரவேணிக் கரையி லருவியாற்றில்
போயுமடா வதனடுத்த தெற்கேகாத
மூவிலையாங் குருந்துதான் மரமுண்டாகுந்
தோயுமடா வதினடுக்கச் சோதிவிருக்ஷந்
தன்னோடு வெண்சாரை தானுமுண்டே. (௱௰)

வெண்ணாவல்.

உண்டடா பச்சையா றதனிலப்பா
யுத்தநம்பி வாசமலை யுயர்த்திமெத்த
நன்றடா வதினுடைய கரையிலேதான்
நாலாறு மரம்நிற்கும் வெண்ணாவலப்பா
கொண்டடா வம்மலையில் சித்தர்கூட்டங்
குறையாது வொருநூற்றுப் பத்துப்பேர்கள்
சண்டடா வம்மலையில் விருக்ஷமூலி
கனமடா சித்தரால் காணொணாதே. (௱௰௬)

நீலக்கொடிவேலி—சங்கிலிசித்தர்வாசம்.

காண்போர்க ளம்மலையிற் கிணறொன்றுண்டு
கருநீலக் கொடிவேலிக் கரையிலுண்டு
வீண்பேர்கள் போனக்கால் காணாதப்பா
விருதுபெற்ற சித்தர்கடான் போகவேணுந்
தாண்பான மயேந்திரமா மலையிலேதான்
சங்கிலிச் சித்தருண்டு கொங்கணர்தன்பிள்ளை
உண்பேர்கள் போனக்கா லேறப்போகா
புறப்பான கெவுனிக்கு யேறலாமே. (௱௰௨)

வெண்சாரைவாழுமிடம்—வெண்சாரையைக் காணுமிடம்.

ஆகுமே தாடைகைதன் சுனைதானென்று
அதில்வாழும் வெண்சாரை யஞ்சாறுண்டு
போகுமே யச்சாரை மயேந்திரமலையெல்லாம்
போக்குவரத் தாயிருக்கும் பூண்பார்சித்தர்
ஏகுமே யம்மலையி லேறிச்சென்று
வியல்பான சுனையருகில் மண்டலந்தானென்று
லாகுமே தானிருக்கும் போதுதன்னில்
வருத்ததிலே காணலாஞ் சாரைதன்னை. (௫௰௩)

சாரைபிடிக்குமுறை—வெண்சாரையருந்தல்

தன்னையே கண்டவுடன் ரம்பித்தேதான்
சார்வான நடுமையம் பிடித்தாயானல்
பின்னையே பிடித்தவிடங் கையிலிருக்கப்
பேராக விருந்துண்டாய் பொருந்திப்போகும்
மின்னையே கயிலிருக்கு மதனைத்தின்று
விருபதுனு யிரம்வருட மிருத்தும்பாரு
பொன்னையே தேடாதே கற்பந்தேடு
பொருள்காணப் புருவமையம் நோக்கிப்பூணே (௫௰௪)

சதுரகிரிமகத்துவம்—பொன்மலைமகத்துவம்

பூணப்பா மயேந்திரத்தி லேறித்தெற்கே
போக்கானல் நாழிகைதான் பொன்மலைதானுண்டு
ஆணப்பா வதனிலொரு குகையுமுண்டு

வதிலிருப்பா ராயிரம்பே ரதிகசித்தர்
காணப்பா அவர்களைத்தான் கண்டாயானால்
கனகமது கேட்டதெல்லாங் கையிலீய்வார்
காணப்பா கெவுனமென்ற குளிகையீய்வார்
நலமான கற்பமது நல்குவாரே. (௱௰௫)

தாட்சைசுனை மகத்துவம்.

நல்குவா ரம்மலையி லுதகமுண்டு
நலமான தயிலமுண்டு பாஷாணமுண்டு
செல்குவார் மூலிகைதான் கோடியுண்டு
திரவியங்கள் கிடாரத்தி லிருப்பதுண்டு
புல்குவார் தாட்சையிற் கிழக்குராவில்
புதுமையொன்று சொல்லுகிறேன் பிழைக்கும்போக்
வொல்குவா ரடையாள முனைக்கக்கேளு
வோரானுக் குயர்வொருகையில் துறட்டிதானே. (௱௰௬)

தயிலமிருப்பிடம்—தயிலமெடுக்கும் விபரம்.

கையிலொரு துறட்டிதனைக் கண்டாயானால்
காணப்பா வதினருகே கல்லிற்பூண்டு
சியலோடு சித்தரையு மந்நாளிற்றான்
சென்றாக்கால் தயிலமது சிவந்துபாயும்
நயமாக வதினடுக்கக் கற்குழிதானொன்று
நலமாக வதிற்றயிலஞ் சென்றுபாயும்
மயமாகுந் தயிலஞ்சித்தர் கொடுபோமுன்னே
மைந்தனே காத்திருந் தெடுத்துக்கொள்ளே. (௱௰௭)

தயிலம்வைக்கப்பாத்திரம்—சயிலவுதகதயில
மகத்துவம்.

கொள்ளுவது பேச்சுவாயின் குடுக்கைதன்னில்
கொள்ளமட்டு மடைத்ததனைக் கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன் காசிடைதா னுள்ளேகொள்ளு
மேன்மையா மண்டலத்தில் சாவுபோச்சு
தள்ளுவது சட்டையது யெல்லாந்தள்ளுந்
சயில வுதகமென்ற தயிலமப்பா
எள்ளளவு இரும்பிலே தடவிப்போம்
யெமமென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (௱௰அ)

மயேந்திரமலைவளப்பம்—கருநெல்லியிடம்.
வாலரசமிருக்குமிடம்.

உள்ளான மயேந்திரமா மலைக்குத்தாழ
ஒருபிறமாம் வடபக்கந் தன்னிலேதான்
கல்லான கல்லிலே குகைதானுண்டு
கருநெல்லி யதனிலே யொருமரந்தானுண்டு
தள்ளாத குகைதனிலே கற்பமணிநாலு
தயிலமுண்டு வுதகமுண்டு தனந்தானுண்டு
வில்லாத வாலரசமொன்றதாகும்
மேலான பரிசனமாம் வேதையாமே. (௱௰௯)

நம்பிமலைவளம்—சோதிவிருக்ஷம்,
செங்கற்றூழை.

ஆமென்ற நம்பிமலை வடச்சார்புதன்னி

லதிகமாஞ் சோதியது ஆல்போல்நிற்கும்
வாமென்ற வதினருகே செங்கற்றுண்டு
வரிசையாய் நிற்கும்டா யிரத்தவர்ணம்
போமென்ற காயசித்திக் கேத்தகற்பம்
புதுமையின்னஞ் சொல்லுகிறேன் பூண்டுகேளு
தாமென்ற பொதிகைக்குக் கிழக்குச்சார்பில்
தாண்டியொரு நாழிகைதான் மலையிற்சென்றால்.

சிவந்தவிலைக்கள்ளி—செந்திராய்—சுணங்கன்மூலி.

சென்றிடவே யவ்விடத்தில் சுனைதானென்று
சிவந்ததொரு இலைக்கள்ளி செந்திராயுங்
கன்றிடவே யுண்டாகுஞ் சுணங்கன்மூலி
காயசித்திக் கேத்தகற்பம் கனக்கவுண்டு
பண்டுடைய கற்பத்தைக் கண்டபேர்க்குப்
பரிவான காயசித்தி கெவுனசித்தி
யென்றுமே வாதசித்தி யெய்துமெய்து
மிறைவனைப்போ லெந்நாளு மிருந்துபாரே. (ாஉ

நரைதிரைமாறத் தயிலம்.

இருக்துகின்ற தயிலமொன்று இயம்பக்கேளாய்
இயலான கடுக்காய்வேர்த் தயிலம்நாழி
வருத்துகின்ற நெல்லிக்காய்த் தயிலம்நாழி
வளமான தாணிக்காய்த் தயிலம்நாழி

திருத்துகின்ற கருந்துவரைத் தயிலம்நாழி
சேங்கொட்டை வித்தினுட தயிலம்நாழி
பொருத்துகின்ற யழிஞ்சிவிரைத் தயிலம்நாழி
புகழான வேம்பின்மேல் தயிலம்நாழி (௭௨௨)
நாழியென்ற சிவன்வேம்புத் தயிலம்நாழி
நலமான காரௌளுத் தயிலம்நாழி
வாழியென்ற வாலுளுவைத் தயிலம்நாழி
வளமான வகையெல்லாந் தயிலம்வாங்கி
தாழியென்ற பீங்கானும் பாண்டத்துள்ளே
சாதகமாய் விட்டுமொரு சேதிகேளு
காழியென்ற தயிலமதி லோகங்காந்தங்
கருதியதோர் செந்தூரங் கலந்துகொள்ளே. (௭௨௩)

மலையேறபக்குவம்—தயிலத்துக்குப்பத்தியம்.

கலந்ததனை நெல்லுக்குள் மண்டலந்தான்வைத்துக்
கணபதியைப் பூசித்துக்காசிடைதான்கொள்ளு
மலந்ததொரு மண்டலந்தான் கொண்டாயானால்
வளர்கின்ற நரைமாறி வண்டுபோலாம்
நலந்திகழுந் தேகமது சிவந்துகாணும்
நாட்டுசகு னதிகமிது நாட்டிப்பாரு
பலந்தருங்கா ணித்தயிலஞ் செய்துகொண்டு
பாரிக்கு மலைமேலே யேறுயேறே. (௭௨௪)
மறுவது யெப்படிதா னென்றுயாரு
விடுமென்ற ஆணுவமு முனிவுந்தீர்ந்து

கூறுகின்ற கொலைகளவுங் காமம்பொய்யுங்
கொடுமையென்ற பாவங்கள் தன்னைத்தீர்த்து
மாறுகின்ற மனந்துரந்து நிராசையாகி
வளமாகப் பச்சரிசி பொங்கியேதான்
தேறலது பால்கூட்டிச் சிறுபயருங்கூட்டிச்
செயமாக வோர்வேளை யமுதுகொள்ளே. (௲௪ (௧))

வாசிகுறி.

கொள்ளையிலே யிடைகலையில் வாசிபாரு
கூசாமல் நெட்டோடே யேறுயேறு
தள்ளையென்ற வாத்தாளை நித்தம்பூசி
சாயுச்சிய பதத்தைநித்தம் சார்ந்துநில்லு
வள்ளையிலே யிதுவெல்லா மகிழ்ந்துபாரு
மகத்தான பூரணமு மனதிற்றேன்றும்
பிள்ளையிலே வுங்களைப்போல் பிள்ளையுண்டோ
பேய்மக்கா ளலையாதே பிலத்துக்கோவே. (௲௫)

பசுபதிபாசம்—புரியட்டம்.

கோவென்ற பசுவொன்று பதிதானொன்று
கூறுகெட்ட பாசமொன்று மூன்றுங்கூடித்
தேவனென்ற பிறப்புக்கு இடமுண்டாச்சு
சித்தனென்று விளைதத்தள்ளி சிவயோகஞ்சேரு
ஆவென்ற வளையில்லை யென்றுசொல்லி
யலையாதே யிந்நூலி லடுத்துச்சித்தி

பூவென்ற ஆயிரத்தெண் மலர்ப்பூவைத்தான்
பேரொளியே திருவட்டப் புரியட்டம்போமே. (௧௨௭)

பசியாதிருக்க.

போமென்ற புரியட்ட மெட்டினாலப்பா
போகாம லடங்கினால் பிறவிபோச்சு
சாவென்ற சொல்லேது லபிதானேது
சாயுச்சிய மானதொரு ஞானவானே
யாமென்ற வமுர்தமது வுண்டாயானா
லப்பனே பசிபோச்சுச் சித்தியாச்சு
நாமென்ற வாணுவமு மப்போபோச்சு
நலமான சிவசித்தன் ஞானியாமே. (௧௨௮)

தேகவாசனை.

ஞானியென்று வொருகலையில் காய்த்ததோசொல்
நரசென்மங் கோடியிலே யொருவனப்பா
யோனிவாய்ப் பட்டசட மாகையாலே
யுத்தமனே காயசித்தி யாகவேணும்
ஊனென்ற தேகமது கற்பதேக
முத்தமனே கயிலாய தேகமானால்
மானிலத்தின் மனிதனல்ல தேவனாச்சு
மைந்தனே யற்பமடா மனிதர்வாழ்வே. (௧௨௯)

பூநீற்றுக்குரு.

வாழவே யின்னமொரு வரிசைகேளாய்
வளமான பூநீற்றை வாரிக்கொண்டு

தாளவே சாறுவ்ராத் தழைகளெல்லாந்
சாதகமாய்ப் போட்டிடவே தண்ணீராகுந்
சூழவே காரத்தைச் சிறுநீருப்பில்
தோய்த்திடவே காரமது சுண்ணமாகுங்
கூழவே சாறுகளில் போட்டுச்சற்றே
குருவென்ற கற்சுன்னத் துப்புச்சத்தே. (௱௯௰௧)

பாஷாணக்கட்டு.

சத்தான சாறுவகை சொல்லக்கேளு
சம்பீரச் சாறுதான் படிதானென்று
வித்தான முன்சொன்ன குருவகைதானென்று
விளங்கவே வகையொன்று வராகனென்று
முத்தாகப் போட்டதனைக் கலக்கிவைத்தால்
முறிந்துமே யொருநாளில் தண்ணீராகும்
பத்தான தெளிவதனை யிறுத்துக்கொண்டு
பாஷாணங் கழஞ்சுக்குச் சுறுக்குப்போடே. (௱௯௰௨)

அயமணி.

போட்டிடவே பாஷாணங் கட்டிப்போகும்
புகழான செம்பிலிட வெள்ளியாகும்
ஆட்டிடவே யரைப்பொடியில் விட்டரைத்து
அளவாக வுணர்ந்திடவே மணியுமாகும்
நீட்டியதோர் தங்கமதிற் சேர்த்துருக்கி
நிசமாக வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்

நாட்டிடவே யாறேழு வரைக்குங்காணும்
நலமான இரும்பிலிட வேதைதானே, (௱௩௨)

தாம்பிர வேதை.

இரும்பைவிட்டுச் செம்புதனைச்சொல்லக்கேளு
எழுத்தாணிப் பச்சிலையின் சாறுநாழி
முருங்கையுட பட்டைச்சார் நாழிகூட்டி
முந்தினதோர் குருவகைக்கு வராகன்போடு
அரும்பவே யறுபதுநா ழிகைக்கடந்தா
லதனுடைய தெளிவதனை யிறுத்துக்கொண்டு
துரும்பான செம்பதனை யுருக்கிச்சாய்த்தால்
சுகமாக விரஞ்சு துய்யானுமே (௱௩௩)

பாஷாணக்கட்டு.

துய்யானி லிடைக்கிடைதான் சேர்த்தாயானால்
துய்யானுஞ் சொல்லரிது சொல்லிவிட்டேன்
மெய்யாகச் சொல்லுகிறேன் சதிரக்கள்ளி
விதமான பாலதனைக் கறந்துவந்து
அய்யாகேள் முன்குருவில் வராகன்போட்டு
அறுபதுநா ழிகையிருக்கத் தெளிந்துபோகும்
உய்யவே பொருகழஞ்சு வெள்ளையப்பா
வுழக்குநீர்ச் சுருக்குடுக்கக் கட்டிப்போமே. (௱௩௪)

நாகக்கட்டு.

போகின்ற பாஷாணந் தன்னைவாங்கி
புக்கிடவே கழஞ்சுக்கு மஞ்சாடித்தான்

ஆகின்ற நாகமது கட்டிப்போகும்
அந்தஇடை தங்கத்தை யதனிற்றூக்கி
ஏகின்ற வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
யேழனாயா மிதன்பெருமை யியம்பப்போமோ
வாகுடைய வமுரியது படிதானென்று
மைந்தனே முன்குருவும் வராகனென்றே. (௱௨௬)

சூதக்கட்டு.

ஒன்றாகப் போட்டதனை வைத்தாயானா
லுத்தமனே கல்மசந்தா னுரைந்துகாணும்
பன்றாகத் தெளிவிறுத்து ரசத்திற்குத்த
பாலையாம் ரசமதுதா னட்டைப்போலாம்
நன்றாக வதையெடுத்துக் கருவூமத்தை
கலமான காயதனிற் புடத்தைப்போடு
வென்றாக வோர்புடந்தான் கோழியாகும்
விதமாகக் கட்டிப்போம் வெள்ளியாமே. (௱௨௭)

சூதச்செந்தூரம்.

வெள்ளியென்ற சூதத்தைத் தின்றாயானால்
வெள்ளையென்ற நரைகளெல்லாம் வண்டுபோலாந்
தெள்ளியதோர் தங்கமிட்டு கெந்தியிட்டு
செந்தூரஞ் செய்திடவே சொர்னமாகும்
வள்ளியதோ ராசவெள்ளி கெவுனமாகு
மப்பனே சாரணையைத் தீர்ந்தபோது

உள்ளியென்ற காட்டுள்ளி யிடித்துக்கொண்டு
வுத்தமனே முன்குருவைப் போட்டிடாயே. (௫௬௭)

வெள்ளீயம் நீர்வாங்கல்.

போட்டதனைப் பிழிந்திடவே தண்ணீராகும்
புகழான முன்குருவைப் பின்னுமிட்டு
மூட்டிதனை வைத்துவைக்கத் தெளிவதாகு
மத்தெளிவில் வெள்ளீய முருக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப் பத்துமுறை சாய்த்தாயானால்
புகழாகக் கட்டிப்போம் பூண்டுபாரு
நாட்டதனில் ரசங்கட்டுஞ் சுருக்குப்போட்
நலமான குளிகையது கெவுனமானே. (௫௬௮)

லிங்கக்கட்டு.

ஆமப்பா முன்குருவை யிலேக்கள்ளிப்பாலில்
அப்பனே யிட்டுவைக்கத் தெளிந்துபோகும்
வேமப்பா வன்னீரில் சாதிலிங்கம்
விதமாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
நாமப்பா வெள்ளியிலே வேதையாகும்
நலமான தங்கத்திற் சேர்ந்துஆடும்
ஓமப்பா யிக்குருவை யண்டத்துள்ளே
யுருக்கவே வகைக்குக்கால் வராகன்போடே. (௫௬௯)
போட்டிதனை வெயிலில்வைக்க மெழுகுமாகும்
புகழான பாஷாண மெல்லாஞ்சாகு

மீட்டில் முள்ளலோகமெட்டில் வேதையாகும்
இதுபோலச் சுறுக்குள்ள போக்கொன்றில்லை
நாட்டமுடன் இக்குருவைவைக்கவேண்டாம்
நலமான பச்சையடா பூனீர்ச்சுண்ணத்
தேட்டமுட னித்தொழிலை முன்னேசெய்து
செயமான லோகத்தி லிருந்துதேறே. (௱௫௰)

வினையகத்தல்.

தேறுதற்கு யின்னமொரு கருவைக்கேளு
செப்பாத கருவையெல்லாஞ் செப்பினேன்கேள்
யேறுதற்கு யலையொன்று மில்லையப்பா
யிளைந்துநீ பிறவாதே யிறவாதேநீ
கூறுவது சத்தியமே பொய்யாகாது
கொலையொன்று மாகாது கொடுமையாகா
வேறுத்துறை யேதுமில்லை வழலையாதி
வேதாந்தக் கருவுக்கு மனமதாமே. (௱௫௧)

தீக்ஷையிரண்டுக்குங்காலம்—சூரியன்கோத்ரம்.

ஆமப்பா மனமுருகச்சித்தியாச்சு
அறிவுகொண்டு சிவயோகத் தடுத்துநோக்கித்
தாமப்பா சிவதீக்ஷை சத்திதீக்ஷை
சாதகமாய் காலைசிவ மாலைசத்தி
போமப்பா யிரண்டுக்கு மிடைகலைதானிருத்தி
போக்கோடே மவுனமுத்திப் பூண்டுநோக்க

வெளப்பா மூலத்தி மேலேசாடு
மொளிகோடி சூரியன்போ லுள்ளேகாணும். (௩௪௨)

சிவத்தின்கூறு—சத்திகூறு.

காணுதற்கு மவுனமுற்றுப் பாருபாரு
காசினியில் விசாரமெல்லாந் தள்ளுதள்ளு
வீணப்பா விசாரமென்ன சமுசாரமென்ன
வெட்டவெளி யொன்றுமில்லை சிவத்தின்கூறு
தோணுகின்ற ரூபமெல்லாஞ் சத்தியாகுஞ்
சுருதிமுடி யிரண்டு மல்லாதுண்டோ
ஊணுகின்ற பஞ்சகர்த்தா வெல்லாமாச்சு
வுறுதியிந்தக் கருவின்றி வேறேதாதே. (௩௪௩)

சடவாழ்க்கை.

ஓதுவது வேதமே யோதவேணு
முலகத்தில் வேதமில்லா தொன்றுமில்லை
மாதுமக்க ளென்றுதா மெண்ணியெண்ணி
மாள்வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
தீதுவென்ற தீனியிலே விழுந்தாயானால்
செடம்விழுந்து போகுமடா ஞானமேது
தானுவென்ற சடமிருந்தால் ஞானம்வாய்க்குஞ்
சகலகலைத் தியானமெல்லாந் தருகும்பாரே. (௩௪௪)

நூலின் மகத்துவ முரைத்தது.

பார்ப்பதற்கு இந்நூலே பார்க்கவேணும்
பரிபூரண சூத்திரமாய்ப் பாடினேன்யான்

தீர்ப்பதற்கு வினைகளெல்லாந் திகைக்கசொன்னேன்
செயமான கற்பமது தெளியச்சொன்னேன்
கூர்ப்புடனே வாதத்தின் விபரஞ்சொன்னேன்
குறைகளெல்லாந் தீர்த்துவிட்டேன் கூர்ந்துபாரு
சூர்ப்பனகி யாசைகொண்டே யெல்லாம்போச்சு
சுருதியுள்ள கெடியனென்று லெல்லாமாச்சே(௱௫௫)

லோகத்தோடொத்துவாழ்தல்.

அச்சிந்த லோகத்தி லிருக்கும்போது
அசலருடன் கூடாதே யாண்வம்பேசாதே
நேச்சிந்த வுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலு மவுனத்தே தூங்குதூங்கு
காச்சந்த மவுனத்தை விட்டாயானால்
கருவிகடான் கொல்லுமடா தியானம்போச்சு
நேச்சென்ற யோகமுதல் ஞானம்போச்சு
முறையோடே யிருக்கவென்றால் குணையங்காரே.()

சித்தரொன்போர்நெறி.

கூர்ப்பதுதான் பூரணத்தைக் காக்கவேணுங்
காரொன்று புருவமையத் திருக்கவேணும்
தீர்ப்பதுதான் வாசனையைத் தீர்க்கவேணுஞ்
செகமெல்லா மொன்றுமில்லை யெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணு
மப்பவல்லோ சித்தனென்ற ஆண்மையாச்சு

நாற்பதுக்குள் கற்பமுண்ணக் கோடியாச்சு
நரைத்தாக்கால் நாளதிகஞ் செல்லுமன்றே. (௱௬௭)

வருடநிலை.

நன்றாக நாளதிகஞ் சென்றாலென்ன
நாட்டிப்பார் வருடமொன்றில் சித்தியொன்று
பன்றான ஆண்டதுதான் பத்துக்குள்ளே
பரிவான காயசித்தி யோகசித்தி
யுன்றான கெவுனசித்தி ஞானசித்தி
யுரப்பான சட்டைதள்ளிக் காந்தியாகும்
ஒன்றான தேகமது வருபமாகு
முத்தமனே சுத்திநடு வோடும்பாரே. (௱௬௮)

சட்டைகழலுமார்க்கம்.

ஓடுகின்ற தத்துவந்தான் தொண்ணூற்றாறு
மோர்கருவிக் கோர்சட்டை யுரிந்துதானால்
சாடுகின்ற பிறவியெல்லாந் தள்ளிப்போச்சு
சாயுச்சிய பதவியிலே சார்ந்துபோச்சு
பாடுகின்ற வேதாந்தம் வெளியாய்போச்சு
பரிபூரணந் தானாச்சு பகலுமாச்சு
வேடுவன்று னெடுத்தபுழுத் தன்ரூபங்கொண்ட
விதமாச்சு மாய்கையெல்லாம் வெளியுமாச்சே (௱௬௯)
அச்சப்பா வாதத்தின் கருவைக்கேளு
வப்பனே வாயிரத்தி னூறுக்குள்ளே

பேச்சப்பா சகலகலை செய்தியெல்லாம்
பேசாத கருவையெல்லாம் பேசிவைத்தேன்
போச்சப்பா பேசிவைத்த கருவேதென்றால்
புகழான சுவுக்காரப் போக்குத்தாக்கு
மேச்சப்பா முப்பூவின் தீட்சைமார்க்க
மியலான கடுங்காரச் செயநீர்போக்கே. (௱௫௰)

நூல்த்தொகை விரிவுரைத்தல்.

போக்கான சுண்ணத்தின் கருவுஞ்சொன்னேன்
புகழான செயநீரின் கல்லுஞ்சொல்லி
வாக்கான களங்கோடு செந்தூரங்கள்
வகையான திராவகமுஞ் சரக்கின்வைப்பும்
தாக்கான கருவோடு குருவுஞ்சொல்லி
சாதகமாங் கைபாகஞ் செய்பாகங்கள்
தூக்கான இடைபாகம் பாசைபாகஞ்
சுறுக்காகுந் தேகமொடு தேகமெண்ணே. (௱௫௧)
எண்ணவே ஞானமொடு மூலிகையின்கூறு
மியல்பான கைபாக மெல்லாஞ்சொன்னேன்
வண்ணமா மெங்தெந்த நூல்களெல்லாம்
வாகான நிகண்டுமது மருவிப்பாரு
பொன்னான பொன்னதுபோ லிந்நூலுந்தான்
போக்கொன்றுந் தப்பாது மறைக்கவில்லை
நன்னயமாஞ் சாத்திரத்தில் மறைப்பேனென்று
நாட்டினேன் வெளியாக நாட்டினேனே. (௱௫௨)

கயவர்நிலைமை.

நாட்டிலே யிப்படிதான் வெட்டவெளியாக
 நாட்டிபுந்தா னறியாட்டா லென்னசெய்வோம்
பாட்டிலே சொன்னதென்றும் பலியாதென்றும்
 பாவிகடா னெடுத்துறைப்பார் பழமையல்லால்
வீட்டிலே யிருந்துகொண்டு வீண்வாய்ப்பேசும்
 வெள்ளாட்டிப் பயல்களுக்கு சாத்திரமெய்யாமோ
தேட்டிலே சாத்திரத்தைத் தேடவேணுந்
 திறவியிலே மனமிருக்கச் சித்தியாமே. (௩௫)

பூசையில் தாயைநினைதல்.

சித்திக்க வேணுமென்றால் சொல்லக்கேளு
 செகச்சால மாடுகிற தாயைக்கேளு
புத்திக்கும் மலர்பதத்தைப் பூசைபண்ணு
 போக்கொன்றுந் தப்பாது பொய்போகாது
முத்திக்கும் பூசைமுறை தன்னைக்கேளு
 மூண்டதொரு சமாதிக்கு ளகிரிவேணும்
பத்திக்கு மூதண்ட லேகியந்தான்
 பாங்கான லகிரியப்பா சட்டமாமே. (௩௬)

தாய்வரமீய்தல்.

சட்டமாஞ் சற்பத்துக் குறுதியாகுந்
 தாயோடு தந்தைக்குப் பிறிதியாகு
மிட்டமாம் வாமத்தைக் கொண்டாயானு
 லெடுத்ததொரு துரையெல்லா மிடர்ப்போகும்

தொட்டதொரு பூசையிலே வாமம்வைத்து
சுகமாகப் பூசிக்கச் செலமதானல்
அட்டமா சித்தியது வாச்சுதப்பா
ஆத்தாளா மப்பனுக்கு மாச்சுதெண்ணே. (௧௫௩)

விவேக தாட்சி.

ஆச்சுதே யோகத்துக் கேணியாச்சு
வப்பனே கற்பத்துக் காகாதாகும்
வாச்சுதே யென்றுசொல்லி வாமங்கொண்டு
மதிமயங்கி வாய்புலம்பி மயங்கிப்போனல்
பேச்சுதே சாபமது தீரவில்லை
யேமமென்ற வித்தையது யெய்தவில்லை
காச்சுதே யறிவென்ற ஞானம்போச்சு
கசுமால வாதியென்ற கழுதைதானே. (௧௫௪)

பச்சைப்பூரவைப்பு.

நானென்ற கற்பூரஞ் சொல்லக்கேளு
சாதகமாய் பாரங்கிவைப்புக் கிடையாதப்பா
யேனென்ற சூடனது பலந்தானென்று
யியல்பான வெடியுப்புப் பலமுங்கால்தான்
சேனென்ற வுவர்ப்பூவும் பலமதொன்று
சேரதிலே களஞ்சியொன்று புழுகுகூட்டி
வானென்ற ஆவின்னெய் விட்டரைத்து
வைத்துநீ குப்பியிலே சீலெய்து. (௧௫௫)

செய்துமே வாலுங்கையில்த் தீயைமூட்டி
சுகமாக முத்தியு மூன்றுசாம்
மெய்துமே நீயாற்றி யெடுத்தாயானா
லிளந்தேங்காய்ப் போலவுந்தா னிருக்கும்பூரம்
கொய்ததொரு குங்குமப்பூ வாசம்போலக்
குணமாகும் பச்சையென்ற பூரந்தானு
மெய்துமே யளப்பாகும் வாதத்துக்கு
மிதுவாதி குருவாகு மிசைந்துபாரே. (௱௫௮)

சவ்வீரவைப்பு.

பாரப்பா யின்னமொரு சேதிகேளு
பரிவான வீரத்தின் வைப்பைக்கேளு
நேரப்பா கடைதனிலே விற்கும்வீரம்
நேராகப் பலமொன்று யெடுத்துக்கொண்டு
சேரப்பா வதினோடு துரிசிசீனந்
செய்ததொரு நவச்சார மன்னபேதி
யூரப்பா கறியுப்பு யுவருப்போடு
யுறவான வெடியுப்புப் பலமுங்காலே. (௱௫௯)
காலாக இதுவெல்லாம் பொடித்துக்கொண்டு
கருணைபெற வேணுமென்று குப்பிக்கேற்றி
நாலாக முத்தியு மாறுசாமம்
நலமாக வெரித்ததனை வாங்கிக்கொண்டு
பாலான தேங்காய்போ லிருக்கிற்கும்
பண்பாக வுடைத்ததனை வைத்துக்கொண்டு

சேலாக முன்போலே நிறுத்துக்கொண்டு
சேர்த்துநீ பொடித்தெடுத்துக் குப்பிக்கேற்றே (௱௬௰)

விரத்தின்மகத்துவம்.

ஏற்றியே முன்போலே எரித்துவாங்கு
இப்படியே மும்முறையி லிருக்கும்வீரம்
தேற்றியே யிவ்வீரஞ் சகலத்துக்குந்
திறமான குருவடா வீரராசன்
நீற்றினமு முருக்கினங் கட்டினமுங்கோடி
நேரான செந்தூரக் களங்குகோடி
வீற்றியே செயநீருந் திராவகமுங்குருவும்
மேலான சாரணையும் வீரமாமே. (௱௬௧)

சித்தருக்குண் டான நாலு வித்தை விபரம்.

வீரமாஞ் சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலே நாலுவித்தை மேலாம்வித்தை
வாரமாம் வாதமொடு வசியமாற்றம்
வளமான அஞ்சனமும் வரவும்வேணும்
ஆரமா மிதுநாலு மில்லாவிட்டா
லலைவாகுஞ் சித்தருக்கு ளடுக்கமாட்டார்
பாரமாம் வாதமொடு வசியஞ்சொன்னேம்
பார்ப்போர்க்கு அஞ்சனமு மாற்றம்பாரே. (௱௬௨)

மாத்தமை.

மாற்றமென்ற வித்தைக்கி வகையைக்கேளாய்
வால்நீண்ட கருங்குருவி யில்லாவிட்டால்

தோற்றுகின்ற காமரூபி பிணைச்சல்பார்த்துச்
சுருதியாய்ப் பிடித்துவந்து சொல்லக்கேளாய்
எற்றுகின்ற வெவ்வேறே சட்டிற்போட்டு
வெரித்துநீ வறுத்திடுவாய் கருகமட்டும்
போற்றுகின்ற யழிஞ்சிலின்வேர் கொண்டுகிண்டி
பொடியாக்கிக் கரிப்போலே வறுத்துக்கொள்ளே. (௬)

அழிஞ்சில் தயிலம்.

வறுத்தகரி தனையரைப்பாய் தயிலங்கொண்டு
வாகான தயிலத்தின் வளமைகேளாய்
பொறுத்ததொரு யழிஞ்சில்விரைத் தயிலஞ்செய்து
புதுமையுள்ள தயிலமது விட்டுமத்தி
செறுத்தவிதைப் பொடிசெய்துக் கலசத்திட்டுத்
தீயான சூரியன்றன் முகத்தில்வைக்கச்
சுறுத்ததொரு தயிலமது விறங்கும்போது
கரியுடனே சேர்த்தரைத்துச் சிமிழில்வையே. (௬௯)

வசியம்—கருங்குருவிமை—குழியானைமை.

வைத்ததனைத் திலதமிட வசியமாகு
மாற்றமாந் தேகமது ஆர்க்குங்காணு
வுற்றதொரு கருங்குருவி யிதுபோற்பண்ணி
வுறுதியாந் திலதமது வுண்மையாகுந்
சித்தியுள்ள குழியானைச் சிறங்கையொன்று
செய்திடவே முன்போலே சித்தியாகும்

புத்தியுள்ள பேர்களுக்குப் பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ள வஞ்சனத்தைப் புகலக்கேளாய் (௱௬௫)

அஞ்சனமை.

கேளப்பா அஞ்சனத்துக் கஞ்சனப்பாஷாணங்
கிடையாது பறங்கிவைப்புக் கொடுக்கமாட்டான்
நாளப்பா நாட்டிலுள்ள கருவைக்கொண்டு
நாட்டுகின்றே னஞ்சனத்தை நன்றாய்க்கேளு
வேளப்பா கருக்குருவி சிவந்ததொன்று
விதமான பச்சோந்தி யுடும்புகாக்கை
சூளப்பா பச்சைப்பாம் பரணைபூநாகஞ்
சோதியொத்த யிந்திரமாங் கோபப்பூச்சி. (௱௬௬)

மணத்தவளைத் தயிலம்.

பூச்சியென்ற வகையெல்லா முழுதுமாகும்
புகலுகின்ற மத்ததெல்லாந் தலைகளாகும்
ஆச்சியென்ற இதுவெல்லா முணர்த்தித்தூளா
யாக்கியே பறணியிலே யடைத்துக்கொண்டு
வாச்சுதென்ற மணத்தவளைத் தயிலஞ்சொல்வேன்
மைந்தனே நூறுதா னெடுத்துவந்து
காச்சிதென்ற வெய்யலிலே யுலர்த்திக்கொண்டு
காட்டினு மணக்குமுத்துக் காரெள்ளோடு. (௱௬௭)

திரிசெய்விதம்.

எள்ளோடு அழிஞ்சில்விரை யிடித்துக்கொண்டு
யிதமாகக் குழித்தயில மியறக்கிதோன்

விள்ளாதே பறணியிலே யடைத்துக்கொண்டு
மேன்மையாம் பெண்ணுடைய விலக்கச்சீலைத்
தள்ளாதே சாணிகளுஞ் சதிரமாகத்
தாளெடுத்து வதனில்மூன்றாள் பரப்பியேதான்
சொள்ளமட்டுந் திரிபோலே யுருட்டிக்கொண்டு
குணமான வெள்ளெருக்கின் நூலைச்சுற்றே. (ாகஅ

மைவாங்கும்வகை—மைபார்க்கும்பருவம்.

சுற்றியதோர் திரியதனை விளக்கிலிட்டுச்
சுகமான முன்றயில மதனில்வார்த்துப்
பத்தியாங் காராமை யோட்டுக்குள்ளே
பத்துகின்ற மையதனைப் பறண்டிக்கொண்டு
வெற்றியா முன்றயிலம் புத்துத்தேனும்
விதமாகச் சரியிடையாய் கூட்டிமத்தி
சித்தியாம் பதினாறு வயதுசென்ற
செல்வர்கையி லிட்டிடவே தெரியுந்தூரம் (ாகக

அஞ்சனத்தின் குணம்.

தூரமது நாழிகைக்குள் பாதாளத்திற்
குட்டிவைத்த தனங்களெல்லாந் தோணலாகும்
சாரமது ஆர்கையி லிட்டாலுந்தான்
கைகடந்து காணுமடா அதிதனைமதான்
வாரமது வானபேய்க் கணங்களெல்லா
மாறிவிட்ட மந்திரங்க ளொன்றும்வேண்டாஞ்

சூனையாம் பேய்களுக்குக் கருவதொன்று
சொல்லுகிறேன் கழுதைநெய்யின் சுறுக்குத்தானே ()

பூதவிலக்கத் தயிலம்.

சுறுக்காக விருக்கவென்றால் சொல்லக்கேளாய்
சுருதியாங் கழுதையுட கொழுப்பைவாங்கி
பிறுக்காக உருக்கிநெய்யை யெடுத்துக்கொண்டு
யிதமான தலங்களிலே தீபமேற்று
உறுக்கான பேய்பூத மோடிப்போகு
முண்மையிது சொல்லிவிட்டே னுலகுள்ளோர்க்குச்
சுறுக்கான வாதவித்தை வருமுன்னாகத்
தாரணியிற் செய்துகொண்டு தபசுபண்ணே. (௱எக)

தனங்களிருக்குந்தலம்—அளகாமலை.

பண்ணயிலே தனங்கிடைக்குந் தலங்கள்சொல்வேன்
பாரிலே யலையாதே பாங்குகேளாய்
உண்ணியதோர் மதுரைக்கு வடமேற்காக
வுரைக்கிறே னளகாமலை யுயரத்தானும்
நண்ணயிலே சுனையருகில் விருக்ஷமொன்று
நலமாக வதின்கீழே சுனைதானென்று
வுண்ணயிலே யருவியுட வூறலப்பா
வுலகத்தோ ராடுவார் தீர்த்தமென்றே. (௱எஉ)

சித்தர்வைப்பு.

தீர்த்தமென்ற வச்சுனையில் கிடாரமொன்று
செயமான ஆயக்கால் தன்னில்த்தூங்கும்

நீத்தமென்ற வோராளுக் குள்ளேயப்பா
நேரான சித்தர்வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்ற காயசித்திச் செய்யவேண்டில்
காசினியி லதையெடுத்துச் செலவுசெய்து
வாத்தமென்ற கற்பமுண்டு வாழ்வோர்க்காகும்
வையகத்தோ ராசைவைத்தால் வாயாதென்னே. ()

மயிலாடுமலையில் கார்த்திகைவீர வர்ச்சுனன் வைப்பு.

வாய்க்கவின்னஞ் சொல்லுகிறேன் மதுரைக்குமேற்கே
மலையொன்று மயிலாடும் போத்தையென்பார்
பாக்கியமா மம்மலையிற் கிணறொன்றுண்டு
பாரப்பா வதிலிறங்கிப் பாருநீதான்
தாக்கியதோ ரிரண்டாளின் தாழப்போனால்
தங்கமென்ற பாளமது நிறையவுண்டு
சாக்கியதோர் பாளத்தை எடுத்துக்கொண்டு
கார்த்திகைவீர வர்ச்சுனன்றன் வைத்தவைப்பே. ()

மைநாகமலையில் சித்தர்வைப்புச் செந்தூரம் குகை கதவுதிறக்க.

வைப்பான பவளுச மலைக்குமேற்கே
மைநாக மலையென்று அதற்குப்பேரு
செப்பான குகையொன்று வதிலேயுண்டு
செந்தூரக் காடப்பா சித்தர்வைப்பு
மெய்ப்பான குகைவாசல் திறப்பதற்கு
விதமொன்று சொல்லுகிறேன் விரும்பிக்கேளாய்

ஒப்பாகச் சொன்னஉச்சா டனஞ்செபித்து
உணர்வாக நூற்றெட்டு உருததான்சார்பே (௱௪௫)

செந்தூரப்பதம்—பக்குவம்

சார்பாகச் செபித்திடத்தாள் திறக்கும்பாரு
தயவாக வதினுள்ளே சென்றுயானு
லார்வாகக்கோடிசெப்பில் செந்தூரங்க
லட்டலோ கம்பழுக்கும் வேதைமார்க்கம்
பேராக மண்டலங்கொள் காயசித்திப்
பிணியான தனுகாது வயித்தியத்தின் மார்க்கம்
ஆர்வான கெவுனசித்திக் குளிகைசித்தி
யட்டமா சித்திமுத லாடும்பாரே. (௱௪௬)

கதவடைக்க—கருமலை.

பாரப்பா வதிலிருக்குஞ் செந்தூரத்தைப்
பரிந்துனக்கு வேணமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பா கதவதனை யடைக்கவேண்டிச்
செபித்திடுவாய் நூற்றெட்டு தம்பனந்தான்
ஆரப்பா கதவதனைத் திறக்கப்போரு
ரறையுகிறே னின்னமொரு வதிசயந்தான்
காரப்பா களக்காட்டின் மேற்கதாகக்
கருமலையொன் றம்மலையில்ச் சுனைதானென்றே (௱௪௭)

கருமலையில் தயிலவைப்பு.

ஒன்றான சுனையருகிற் சினைரொன்றுண்டு
உத்தமனே தயிலமது செப்பமதிற்றுங்

சன்றான தயிலத்தைக் கலசந்தன்னில்
காணப்பா முகந்துகொண்டு கருவைக்கேளாய்
நன்றான இரும்புசெம்பு லோகமெட்டில்
நாட்டினால் தங்கமது நலமதாகும்
உண்டான செய்தியிது யின்னங்கேளாய்
உரைக்கின்றேன் வெளியாக வுரைக்கின்றேனே (எஎ௩)

நம்பிமலை யருகில் விபூஷணர்வைப்பு தங்கக்காசு.

உரைக்கின்றே னம்பிமலை நம்பிக்கோவி
லுற்றதொரு சந்நிதிக்குக் கிழக்கதாக
நிரைக்கின்றேன் மலையருகில் குத்துக்கல்லு
நிற்குதடா வதனடியில் தங்கக்காசு
சுரைக்காசுங் கற்குழிதா னென்றுக்குள்ளே
கனகமென்ற காசதுதான் கோடியுண்டு
திரைக்கின்றேன் மூடிக்கல் செய்துமூடி
திறமாக இருக்குமடா திறக்கொண்ணாதே. (எஎ௪)

கதவுதிறக்கத்தியானம்.

ஒன்றான கல்திறக்கும் வகையைக்கேளாய்
உற்பனமாய் வயிரவனைப் பூசித்தேதான்
நன்றான வயிரவன்றன் தியானமோத
நலமான மூடிக்கல் திறந்துபோகும்
பன்றான கனகத்தை யெடுத்துக்கொண்டு
பரிவான மூடிதன்னை யடைத்துப்போடு

யின்முன விபூஷணர்தான் வைத்தவைப்பு
மேதினியில் நடவாதே மலையிலேறே. (எஅ௰)

மருந்து மலை

ஏறுதற்கு இன்னமொரு வகையைக்கேளாய்
இயல்பான குமரிக்கு மேற்கேயப்பா
கூறுவா ருலகத்தோர் மருந்துமலையென்று
குறித்துவைத்த மருந்ததனை யறியமாட்டார்
தேறுவா யம்மருந்தை யறிவதற்கு
செய்தியொன்று சொல்லக்கேள் மேற்கதாக
ஏறுவா யம்மலையி னுச்சிதன்னி
லிருக்குதடா சுனையொன்று யிருக்கும்பாரே. (எஅக)

பனைப்பாஷாண வேதை.

இருக்கின்ற சுனைக்குள்ளே பனைப்பாஷாண
மியல்பான பனங்குலைபோல் கிடக்கும்பாரு
அருக்கின்ற குலையதனை யெடுத்துக்கொண்டு
அழகான தீயிலிட்டுச் சிவக்கக்காச்சிப்
பருக்கின்ற வெள்ளாட்டின் பாலிற்போட்டால்
பாதியிரு கூறாக வெடித்துப்போகுங்
குருக்கொண்ட பாஷாணங் கவுரிபோலக்
கோழிமுட்டை கருப்போன்ற கொள்கைகாணும். ( )

மருந்துமலையில் தயிலமிருப்பிடம்—அனுமார்வைப்பு.

காணுகின்ற பாஷாணங் கழற்றிவாங்கி
கால்ப்பணமா யேதற்விடு கற்பமாகும்

தோணுகின்ற பாஷாண வகையிற்றேய்த்து
சுகமான காரமிட்டு உருக்கிவாங்கிப்
பூணுகின்ற நவலோகந் தன்னிற்பூட்ட
பொன்னாகும் பத்தரையும் பொய்யாதப்பா
கோணுகின்ற வதனடுக்கக் குகைபொன்றுண்டு
குகையினிட பாகத்தில் வாசலுண்டே. (ஈஅஉ)

வாசல்திறக்க நவகோண வாலைபூசை.

வாசலது காணும லடைத்துப்போட்டார்
மகத்தான சித்தருட மாய்கைமாய்கை
ஊசலென்ற கதவதுதான் திறப்பதற்கு
உபாயமொன்று சொல்லுகிறே னுண்மையாகக்
காசலையா யம்மலையி லிருந்துகொண்டு
கருதியே நவகோண வாலைப்பூசை
யேசலுட றைப்பதுனள் பூசித்தக்கா
லீஸ்பரியாள் கிருபையினல் வாசற்காணும். (ஈஅ௩)

கிறுபையினல் வாசலது திறந்ததானல்
கேளப்பா வதனுள்ளே நுழைந்துபாரு
உறுதியுள்ள வீட்டுபோல் விலாசங்காணு
மொருபக்கத் தொருகிணற்றில் தயிலம்நிற்கும்
பொறியென்ற அத்தயில மொண்டுகொண்டு
பூரணமே யென்றுசொல்லி பூசித்தேதான்
மறுபடியுங் கதவைத்தா னடைத்துப்போட்டு
வந்திருந்து செய்யுகின்ற மார்க்கங்கேளே. (ஈஅ௫)

தயிலம்வந்த மார்க்கம்

மார்க்கமந்தத் தயிலம்வந்த வகைதான்கேளாய்
மாருதிதான் மருந்துமா மலையிற்சென்று
சேர்க்கையிலே கொண்டுவந்தார் ஸ்ரீராமர்போரில்
செத்தவர்க ளனைவெழுப்புஞ் செய்கையாலே
போற்களத்தில் மடிந்தவர்கள் பிழைத்தபோது
போகாதே வாங்கிவைத்தார் புதுமையாக
மாற்கமுள்ள தயிலமது கொண்டபேர்க
ளாவிறந்த சித்தரடா ஆகியாமே. (௭௬௩)

ஆமிந்தத் தயிலத்திற் பணவிடைதான்கொள்ள
ஆதிசதா சிவன்வரைக்கு மிருந்தும்பாரு
ஓமிந்தத் தயிலமிது வார்க்குக்கிட்டு
முறுதியுள்ள சித்தனென்று லபிலக்கும்பாரு
வாமிந்தச் சாத்திரந்தான் கிடைத்தபேர்க்கு
மறுபிறவி யில்லைமகத் தானசித்தன்
சோமிந்து தரித்தசிவன் சொன்னமார்க்கஞ்
சொல்லிவிட்டேன் வெட்டவெளி யாகத்தானே. (௪)

தோற்றமெய்தல்.

வெளியாகத் தோனுதற்குக் கருவைக்கேளாய்
வேதாந்த நூல்களெல்லாம் விரைந்துபாரு
ஒழியாத ஆசையெல்லா மொழித்துப்போடு
ஊடுருவச் சுழிமுனையை பூணிப்பாரு

வழியோடே கற்பமுண்ண வகையைப்பாரு
வாதவித்தை செய்வதற்கு வகையைப்பாரு
தெளிவாக வேறுதற்குத் தீட்சைபாரு
ஜெகஜாலக் கூத்தெல்லாஞ் சேரப்போக்கே. (௱அஅ)

கொங்கணர்பெருமை.

போக்கான சாத்திரங்க ளொன்றுமில்லைப்
பூரணத்தி னூல்போலே சொல்லாதொன்றும்
நோக்கான கொங்கணர்சொல் கடைக்காண்டத்தில்
நுணுக்கங்க ளதிகமுண்டு கண்டுபாரு
வாக்கான விந்நூலு மந்நூலும்போல்
வகைவிபர மானதொன்றும் விளங்கவில்லை
தூக்கான தூக்கெல்லாஞ் சொல்லிவிட்டேன்
சோதித்தால் தெரியுமடா சுருதிச்சொல்லே. (௱அகூ)

நூல் மகத்துவம்.

சுருதிகண்டால் சுருதிகொண்டு யேறவேணுந்
துன்மார்க்கர்க் கிந்நூலைச் சூட்டலாகா
பருதிகண்ட பனிபோலே வினைகள்நீங்கும்
பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
கருதாம லிந்நூலை யீய்ந்தாயானால்
கயிலாயச் சித்தர்வந்து சபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க் கண்டுகொண்டு மனத்துள்வைத்து
வுரத்துடனே வந்துவிடு மலையின்மீதே. (௱கூ0)

மீதான மலைகளிலே யேறினாலும்
விருதாகு மிந்நூலைக் கைவிடாதே
வாதாடுஞ் சித்தர்வந்து யெதித்தாரானால்
மறவாம லிந்நூலை யெடுத்துப்பேசு
ஓதாமல் வாய்பிதற்றி யோடுவார்க
ளுனக்குத்தா னெதிராரு முண்டோவென்று
ஆதார மானதொரு கருவெல்லாந்தா
னறைந்ததனால் பூரணநூ லானவாறே. (௱௬௪)

குழிக்கல்லளவு.

வாறான குழிக்கல்லின் மார்க்கங்கேளாய்
மைந்தனே பிர்ம்மாவின் சிரசுபோலே
கூறான வகலமணி விரல்முப்பத்துங்
கொள்கையாம் நிகளமணி விரல்நால்பத்து
வீறான விளம்பதுதான் விரலிரண்டு
வீதியிலே யாழமிது விரலிரண்டு
பேறான இருபிறமு மூக்குமாகும்
பெரிதான குழவியைத்தான் பேசுவேனே. (௱௬௫)

குழவிக்கல்லளவு—பிரம்பளவு—செபமாலைக்கணக்கு.

பேசுகிறேன் பதினாறங் குலமாம்நீளம்
பெரிதான முகவட்ட மணிவிரல்நால்வீதி
மாசகரே ரிம்மிடியங் குலம்பத்தாகு
மரவிடையுஞ் சிவலிங்க மானவாறும்

வீசுகின்ற பிரம்பதுதான் மொழியைந்தாகும்
வேதாந்த நீளமது விரல்பத்தொன்று
ஈசுரன்றான் வகுத்தருளுங் கணக்கிதப்பா
யேற்றசெப மாலைபதி னறுமுகமஞ்சே. (ரகூஉ)

சித்தர்வேடமறிக—யோகதண்டப்பிறமாணம்

குண்டலப்பிறமாணம்—யோகவேட்டி.

அஞ்சாகு மாராகு மதீதமாகு
மணிவிரலால் யோகதண்டா றுறுமாகும்
பஞ்சாக்ஷரக் கவசகுண் டலந்தான்கேளு
பரியினுட செம்பதிகம் பளிங்கதியமாகும்
மஞ்சாடி பதினொன்று பதினாறுகு
மக்களே யிருபுரமு மகிழ்ந்துகொள்ளு
நெஞ்சசற்றாகச் சாகிற யோகவேட்டி
நெடுநீளந் தொண்ணூற்று றங்குலமாம்நேரோ. ()

கயிலாயவக்ர்கம்—ஆசனம்—லிங்கம்—கோவணம்

மணி—கைச்சவம்.

நேரான வீதினால் விரலேயாகும்
நிஷ்டைக்கா சனம்புலியா சனமுமாகும்
கூறான ரசலிங்கம் பூசையாகும்
கோவணந்தான் பூங்காவிக் கட்கங்கையிற்
சீரான ரசக்குளிகைச் செபமாலைக்குச்
செகமதனில் கிடையாது செபம்விசேட்டம்

பேரான கைச்சரந்தான் உப்புமணியப்பா
பேசரிய கயிலாய வற்கத்தோற்கே. (௱கூ௫)

வற்கத்தின்பெருமையறிதல்.

வற்கத்தி லதிகமடா சிவயோகந்தான்
வண்மையுள்ள மெஞ்ஞான மார்க்கம்ரெண்டு
சொர்க்கத்தில் சொர்க்கமென்ற பேர்பெறவனக்குத்
தொல்லுலகில் மனிதரோ டிறவுமுண்டோ
கர்த்திக்கக் கர்க்கமென்ற கசடர்தங்கள்
கையிலே யேற்பதுதான் மிகவுங்கொஞ்சம்
மர்க்கத்தி லாகவுன்னை வணங்கவேணும்
வணங்காமற் போனதென்ன வறிந்துகொள்ளோ. ( )

சிவயோகம்—மெஞ்ஞானி மார்க்கம்.

அறிவான பேரின்பத் தடுத்தாகி
லசைவையென்ற தீட்சைபத்து மறிந்தாகில்
குறியான சிவயோகங் குறித்துக்கண்டார்
கோமளையாம் பராபரைநிர்க் குணத்தைக்கண்டார்
பிரியாமல் சிவனுடைய வொளியைக்கண்டார்
பேரான சிவயோக ரிஷிமெஞ்ஞானி
செறியான விதர்க்கெல்லா மறிவேயாகா
நினைத்துமக்கா னொருமனதாய் நிலைத்திடபோ. (௱கூ௬)

யோகத்துக்கதிகாரி.

நிலைத்திட ரென்றாலும் நிலைக்கமாட்டான்
நீடுலகில் கோடியிலே யொருவனப்பா

சுலைந்திடு மென்றாலுங் கலைக்கப்போகா
கனத்தநல முள்ளதொரு ராசிசேர்ந்தோர்
மலைத்திடு மென்றாலு மலைப்பாரோதான்
வச்சிரம்போ லறிவுடைய மக்காள்மக்காள்
உலைத்திடு மென்றபுத்தி யுலகிலுள்ளோ
ரோகோகோ வொருகோடி யுளுத்தார்காணே. (௱சுஅ)

கற்மி பொய்வேடர் நிலை.

காணுவேன் வாதமென்பார் யோகமென்பார்
கற்பமுண்ணப் போறனென்பா ருண்டேனென்பார்
பூணுவேன் றீட்சைபத்தும் பெற்றேனென்பார்
பூரணநூல் பாராத புலையரப்பா
தாணுவாய் நின்றபூரஞ் சோதிகாணார்
சதாசிவன்முன் வந்தாப்போல் பூசைசெய்வார்
ஆணுவத்தா லலைந்துகெட்ட மட்டைப்பேச்சை
யடுத்துநின்று கேளாதே யகலப்போவே. (௱சுகூ)

சித்தர் மரபுளோர்க் குறைத்தல்.

போவென்று சொன்னதுதா னைமைந்தா
புகழ்பெரிய சித்தருட மரபுள்ளோரைக்
கூடவென்று தர்க்கமிடு முலகமாண்பர்
கூட்டுறவை விட்டுவிடு குன்றிலேறு
தேவென்று சித்தருடன் சேரவேணுஞ்
செப்புவார் வேதாந்தந் திறந்துசொல்வார்

ஆமென்று வலையாதே கற்பங்கொள்ளாய்
அப்பனே யோகமுற்று லிதப்பேறே. (௨௱)

பேறறிதல்.

பேறென்று சொல்வதுதான் ஞானப்பேறு
பேசரிய வேதாந்தம் பெற்றபேறு
நூறென்று பூரணநூல் பார்த்தபேர்கள்
நுண்மையென்றுஞ் சிவயோகத் திருந்தபேறு
வாறென்ற காயசித்தி யானபேறு
மகத்தான் தீக்ஷைவிதி யறிந்தபேறு
ஆறென்ற வமுர்தமதை யுண்டபேறு
யோகோகோ கெவுனசித்தி யுறுதிப்பேறே. (௨௱௧)

வயிராக்கியம் பூணல்—ஆக்கைநிலையாமை.

உறுதியா மித்தனைக்குங் கருவேதென்று
லுத்தமமா மனமல்லோ விதற்குமூலம்
பொறுதியாங் குணம்வந்து சாந்தமானால்
பூலோக மாய்கையெல்லாம் விட்டதானாற்
சுருதியா மனமுருகி நிராசையானால்
சொல்லொன்றுந் தப்பாது சித்தியாச்சு
விறுதாவி லலைந்தலைந்து ஞானம்பார்த்தால்
வேரற்ற மரம்போலே விழுந்துபோமே. (௨௱௨)

பெரியோர் பெருமை.

விழ்ந்திறந்து போகின்ற பேரோயல்லால்
மெஞ்ஞானம் வந்தவர்கள் காணரப்பா

சா

சூழ்ந்திருந்த வண்டமெல்லாஞ் சோதித்தாக்கால்
சுகுர்தவான் கோடியிலே யொன்றுகாணும்
வாழ்ந்திருந்த வுலகத்தே யிருந்தாலுந்தான்
மானிடரி லொருவன்டா வறியப்போகா
தாழ்ந்திருந்த தன்மையுற்றுப் பெரியோர்போலத்
தாரணியி லேயிருப்பார் பெரியோர்தானே. (௨௱௩)

சமயக்கோள்.

தானென்ற கலைக்கியான மறிந்தாலென்ன
தற்கமொடு மாயையுற்றால் தவறிப்போகும்
வானென்ற நிராசையுற்று மாய்கைபோக்கி
மனமுருகிப் பூரணத்தி லன்புசேர்ந்து
கோனென்று யிருந்தவற்கு யித்தனையுமெய்துங்
குவலயத்தி லறுசமயக் குருடர்கேட்டார்
தேனென்ற சிவபூசை சத்திபூசை
தெரிந்தவனே சிவயோகி சித்தனாமே. (௨௱௪)

இந்நூலின் தொகைக்கியன்ற நூலின்பெயர்.

ஆமென்ற சித்தருக்கு மிந்நூல்வேணு
மப்பனே பூசையிரு நூறும்வேணும்
தாமென்ற தீக்ஷையிரு நூறும்வேணுஞ்
சாதகமாய் ஞானத்தி நூறும்வேணும்
ஏமென்ற வாதமிரு நூறும்வேணும்
இயல்பான கொங்கணரஞ் ஞூறும்வேணும்
வாமென்ற சார்வுக்குச் சட்டநாதர்
வைத்தாரோ வெளியாக வாதந்தானே. (௨௱௫)

கல்வியொழுக்கம்.

வெளியாகச் சொல்லுவரோ வேதநாலும்
வேதாந்தி யானுக்கா லடக்கம்வேணுங்
களியாக வுலகத்தே கருணைச்சொன்னால்
கழுதையவன் கரையேற மாட்டான்போயோ
சுளிவாக மனதுள்ளே யடக்கமானால்
சுருதியாஞ் சித்திக்குஞ் சித்தனாவான்
தெளிவாகப் பேசுவதார் சித்தர்பேசார்
திறப்பதார் செடமழிந்த ஞானிதானே. (௨௱௬

ஏகபாதவிளக்கம்.

ஞானமென்ன யோகமென்ன இரண்டுமொன்று
நலமறியா மாடுகடான் வெவ்வேறென்பார்
பானமென்ன வமுர்தமென்ன இரண்டுமொன்று
பண்பறியாப் பாவிகடான் சுத்தமென்பார்
மானமென்ன ஈனமென்ன ரவிமதிதானென்ன
வையமென்ன வானமென்ன ஆண்பெண்ணென்ன
கானமென்ன வுலகமென்ன சாதியென்ன
கருதிப்பா ரொன்றுருக்குங் காணுங்காணே. (௨௱௭

அறம்பலன்—பவம்பலன்—சிவயோகம் பூசைபலன்.

காணுகின்ற தர்மமது செய்வானாகில்
காசினியி லவனுக்கா மவன்பிதிர்க்குமாகும்
தோணவே பாவந்தைச் செய்வானாகில்
சொன்னவற்கா மல்லாட்டால் சுத்தத்தார்க்காம்

ஊணவே சிவயோகஞ் செய்வானாகி
லுயிரதுதான் மோக்ஷமெய்து முண்மையுண்மை
பூணவே பூசைசெய்தால் சிவத்துக்காகும்
பூசையென்ன மனங்கனிந்தால் புகழுமாச்சே (௨௱௮)

அன்பிலார்ஞானக்குறி.

ஆர்சப்பா கனிவல்லோ பூரணந்தா
னரகரா மனமுருக வருமைமெத்த
காச்சப்பார் நின்றதொரு கன்னெஞ்சர்க்கு
காயசித்தி ஞானசித்தி கடினமாகும்
பூச்சப்பா ஞானிகடான் பூலோகத்தில்
பூரணமே தெய்வமென்பார் பூசையென்பார்
பேச்சப்பா மெத்தவுந்தான் படித்துச்சொல்வான்
பேசாமல் மனமுருகாப் பெரியமாடே. (௨௱௯)

உலகாதியந்த முடிவறிதல்.

பெருமையென்ன வாழ்வென்ன கீர்த்தியென்ன
பேச்சென்ன மகிழ்ச்சியென்ன பிதிர்க்களென்ன
அருமையென்ன சுகமென்ன கோவிற்குளமென்ன
அதிதமென்ன அரகரா சிவாயமென்ன
உரிமையென்ன வுறவென்ன சங்கற்பமென்ன
வுலுத்தமென்ன ஈவென்ன கற்பமென்ன
சருமையென்ன செம்மையென்ன கல்வியென்ன
சாசினியில் நரகமென்ன சொர்க்கமென்ன. (௨௱௰)

என்னவே குருவென்ன சீடனென்ன
இயல்பென்ன வியல்புகெட்டுப் போனதென்ன
பன்னமிகுஞ் சாதியென்ன நீச்சமென்ன
மாய்கையென்ன கற்பமென்ன அழிவதென்ன
பொன்னென்ன மனமென்னச் சீர்தானென்ன
பொல்லாத தாயென்ன பிறப்பதென்ன
முன்னென்ன பின்னென்ன முறைதானென்ன
முடிவறிந்தோன் சிவயோகி மூர்த்தியாமே. (உாஶ)

மூர்த்தியென்று முத்தியென்று மிரண்டுஞ்சொல்வார்
முக்கியமென்பார் சிலதெல்லா மூடர்மூடர்
ஆர்த்தியென்ற பூரணந்தா னல்லாதுண்டோ
யதிற்பிறந்த தைந்துவகை யல்லாதுண்டோ
சீர்த்தியென்ற வகையறிந்து சித்தரானார்
கிலேசமில்லா ஞானியென்று சிலபேரானார்
கீர்த்தியென்ற ரிஷியோடு முனிவரானார்
சிவயோகி யென்றதிரு நாமந்தானே. (உாஶ)

ஒடுக்கமுணர்வுறுதல்.

திருவுடைய நாமமென்ன சிவயோகந்தான்
செகத்திலுள்ளோர் செய்வதொன்றுஞ் செம்மையல்ல
அருவுடைய தாயினுட் ஆட்டுஆட்டு
ஆதியென்ற சிவனாட்டு ஐவராட்டு
கருவுடையோ ரறிந்துகொள்ளு மீதல்லாமற்
காசினியோர் சொல்வதிலே கதையொன்றில்லை

மருவுடைய பூவினுட வாசம்போல
மனமுருகிப் பூரணத்தில் மாளுமாளே. (உ௱௯௩)

ஆதிவஸ்து—அநாதிவஸ்து.

மாளாம லாண்டிருந்தால் யோகியாச்சு
மார்க்கமந்தப் படிதானே மெஞ்ஞானிக்கும்
ஆளாம லாண்டிருப்பா ரானுந்தாயும்
ஆதிவஸ்து அநாதிவஸ்து மொண்டுந்தானும்
கேளாமற் கேட்டிருப்பார் நடனவோசை
கிரிகையென்ற மனமங்கே புக்கிப்போகும்
வாளான வாழ்வுசிவ யோகவாழ்க்கை
மற்றதெல்லா மாப்கையென்ற வாழ்க்கையாமே. ·

நூலின்தொகை வகையின்பம்.

ஆமிந்த இருநூற்றுப் பதினாறுக்கு [ளோன்
ளடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாய்ச்சொல்
ஓமிந்த வுலகத்தி லிந்நூல்கிட்டி
னுலகத்திற் சித்ததிக முண்டாய்ப்போச்சு
தாமிந்த சூத்திரத்தைக் கெணியாதிருந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ்சொன்னேன்
நாமிந்தப் படிசொன்ன யோகிக்கிய்வாய்
நலமான பூரணசூத் திரந்தான்முற்றே. (உ௱௯௬)

அகஸ்தியர் பூரணசூத்திரம்

முற்றிற்று.